# சோஷலிஸம்

அக்டோபர் 10
1984

சோவியத் மாசிகை

பல்தொழில் கற்றுப் பயிற்சி நிலையம்

## தத்துவமும் நடைமுறையும்

படைக்குறைப்பும்
அபிவிருத்தியும்

★

சமாதான சகவாழ்வும்
இன்றைய உலகும்

★

ஜெர்மன் மண்ணில்
சோஷலிஸத்தின் வெற்றி

★

மாற்றங்களின் போக்கில்
இந்தியா

1984 (106) **10**

# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்

சோவியத் சித்தாந்த அரசியல் பத்திரிகைகளின் மாதாந்த மஞ்சரி

பல்துறைப் பயிற்சி நிலையம்

நொவஸ்தி செய்தி ஸ்தாபனத் தயாரிப்பு

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய தூதரகத் தகவல் பிரிவின் தலைவர் வி. ஆர். குலாந்தா அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த ரோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **இன்றைய விவகாரங்கள்** | 'பிராவ்தா'வின் கேள்விகளுக்குக் கொன்ஸ்தாந்தீன் செர்னென்கோ அளித்த பதில்கள் | 03 |
| **சமாதானம், படைக் குறைப்புக்கான வாய்ப்புக்கள்** | அன்ட்ரீ குரோமிகோ<br>படைக்குறைப்பும் அபிவிருத்தியும் | 10 |
| | ஸ்டீபன் ஸாலயேவ்<br>சமாதான போராட்டத்தில் சோவியத் தொழிற்சங்கங்கள் | 13 |
| | பியோதர் பஞ்ச்சின்<br>சோவியத் பாடசாலைச் சீர்திருத்தம் | 17 |
| **மார்க்ஸியம்-லெனினியமும் எமது காலமும்** | அலெக்ஸி லெபதேவ்<br>சமாதான சகவாழ்வும் இன்றைய உலகும் | 21 |
| | பேராசிரியர் வாசிலி பொண்டார்<br>கட்சி வழிகாட்டுதலின் அரசியல் இயல்பு | 25 |
| **வரலாறும் அனுபவமும்** | ஜெனரல் அலெக்ஸி யெபிசேவ்<br>லெனினின் கட்சி-மாபெரும் தேசபக்த யுத்தத்தின் அமைப்பாளர் | 29 |
| **இளைஞர் உலகம்** | சோஷலிஸ நாடுகளில் இளைஞர் கழகங்கள் | 34 |
| **வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள்** | அலெக்ஸாண்டர் திஸாஸகோவ்<br>வாஷிங்டனின் கொள்கையும் வளர்முக நாடுகளும் | 45 |
| | அலெக்ஸி மெஸ்செர்ஸ்கி<br>மாற்றங்களின் போக்கில் இந்தியா | 49 |
| | கே. புருட்டென்ட்ஸ்<br>அணிசேரா இயக்கமும் இன்றைய உலகமும் | 52 |
| **ஏகாதிபத்தியத்தின் சுயரூபம்** | பிராண்டிசெக் கோலார்<br>வன்முறையும் பயங்கரவாதமும் அமெரிக்கக் கொள்கையின் கருவிகள் | 56 |
| | அமெரிக்க: வன்செயல் தத்துவம் | 61 |




# 'பிராவ்தா'வின் கேள்விகளுக்குக் கொன்ஸ்தாந்தின் செர்னென்கோ அளித்த பதில்கள்

சோ.க.க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளரும் சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் தலைவருமான கொன்ஸ்தாந்தீன் செர்னென்கோ ''பிராவ்தா'' செய்தித் தாளின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள்.

**கேள்வி:** அமெரிக்க நிர்வாகம் சமீப காலத்தில் தனது வெளிநாட்டுக் கொள்கையின் முதன்மையான அம்சங்களை ஒட்டுமொத்தமான வடிவத்தில் மீண்டும் முன்வைத்துள்ளது. இது தொடர்பாக என்ன கூறமுடியும்?

**பதில்:** அமெரிக்கத் தலைவர்கள் சமீப காலத்தில், யாவற்றுக்கும் மேலாய் குடியரசுக் கட்சியின் மகாநாடு தொடர்பாக எண்ணற்ற உரைகளை ஆற்றியுள்ளனர் என்பது வாஸ்தவமே. இந்த அறிக்கைகளும் மகாநாட்டில் ஏற்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனமும் உலகத்தைப் பற்றிய இன்றைய அமெரிக்க நிர்வாகத்தின் கண்ணோட்டத்தையும், அதன் சமகால எண்ணங்களையும் பற்றி சீர்தூக்கிப் பார்ப்பதை அவசியமாக்குகின்றன. இவை எல்லாம் ஒரு தாழ்வான மனப்பதிவையே ஏற்படுத்துகின்றன எனலாம்.

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குபவர்களின் அரசியல் ரீதியான முதனிலை அம்சங்களும், நடைமுறைச் செயல்களும் சர்வதேசப் பதற்றத்தை மேலும் அபாயகரமாக உச்சமாக்கும் மார்க்கத்தை

வெளிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பதே முக்கியமானதாகும். இந்த மதிப்பீட்டை பரந்த அரசியல், வெகுஜன வட்டாரங்களும் பகிர்ந்து கொள்கின்றன.

வாஷிங்டனில் உள்ளவர்கள் தம்முடைய மஹா வல்லரசு அபிலாஷைகளையும், நவீன உலகில் அமெரிக்காவின் பாத்திரம் மற்றும் அது வகிக்கின்ற இடம் பற்றி மிகைப்படுத்தப்பட்ட கருத்தோட்டங்களையும் பகிரங்கமான வெறித்தனத்துடன் வெளிப்படுத்துகின்றனர். தாம் மிகவும் வலுவுள்ளவர்கள், உலக மக்களின் எதிர்காலத்தை ஆளுமை செய்பவர்கள், தம்முடைய விருப்ப ஆணையை ஏனையோர் மீதும், எல்லா இடங்களிலும் செலுத்துபவர்கள் என்ற பாத்திரத்தை அவர்கள் கோருகின்றனர். சுருக்கமாகச் சொன்னால், அவர்கள் இப்போது சோஷலிஸத்துக்கு எதிராக மாத்திரமன்றி, உண்மையிலேயே முழு உலகுக்கும் எதிராக ஒரு ''புனிதப் போரை'' நடத்துவது பற்றி பேசுகின்றனர்.

மக்களினங்கள் தம்முடைய எதிர்காலம் குறித்து அக்கறை கொண்டுள்ள ஒரு தருணத்தில், சர்வ வியாபக சமாதானத்தை வலுப்படுத்துவதையும், ஆயுதப் போட்டியைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தி, இறுதியில் அதை ஒழிப்பதையும் நோக்கமாகக் கொண்ட பெரும் பொறுப்பு வாய்ந்த கொள்கையை அரசாங்கங்களிடமிருந்து அவர்கள் எதிர்பார்த்திருக்கின்ற வேளையில், வாஷிங்டனில் இருப்பவர்கள் வெறும் இராணுவப் பலத்தைத் துணையாகக் கொண்டு செயல்படுகின்ற தம்முடைய எண்ணத்தைப் பிரகடனம் செய்கின்றனர்.

படைபலத்தினால் ஆட்டிப் படைக்கப்படும் அவர்கள் எதார்த்த உணர்வைச் சாதாரணமாகவே இழந்து விடுகின்றனர். உலகம் அடிப்படையில் மாற்றமடைந்திருக்கிறது. அதன் பிரச்னைகளைப் படைபலத்தால் தீர்க்க முடியாது. இது ஒரு தடவைக்கு மேலாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதில் அமெரிக்காவின் அனுபவமும் கூட உள்ளடங்கும். ஒருவரின் சொந்தப் பாதுகாப்பை, ஏனையோருடைய பந்தோபஸ்தின் இழப்பில் வலுப்படுத்துவது சாத்தியமில்லை. அது போன்றே, அணுவாயுதப் போரில் வெற்றி கொள்ளும் நம்பிக்கையில் இராணுவ மேலாண்மையைச் சாதிக்கும் கணிப்புகளும் இன்று கவைக்குதவாதவையே. நான் மீண்டும் கூறுகிறேன்: சோவியத் யூனியன் ஏனையோர் மீது இராணுவ மேலாண்மையைப் பெற விரும்பவில்லை. ஆனால், தன்மீது மேலாண்மை கொள்ள யாரையும் அது அனுமதிக்கப் போவதில்லை. அமெரிக்காவில் உள்ள சிலருக்கு இது ஏற்கமுடியாததாக இருக்கலாம். ஆனால், எமது இரு நாடுகளும் சமமான அடிப்படையில் ஒருவர் மற்றவரின் சட்டபூர்வ நலன்களைக் கவனத்திற்கு



எடுத்துக் கொள்வதன் அடிப்படையில் மாத்திரமே ஒன்றுக்கொன்று செயல் ஈடுபாடு கொள்ளமுடியும் என்ற உண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும். இதற்கு விவேகமான மாற்றுவழி எதுவுமில்லை.

வாஷிங்டனின் பலவான் கொள்கையை ஒருவித ''ஒழுக்க நெறிக்'' கருத்துக்களைக் கொண்டு நியாயப்படுத்த முஸ்தீபுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்கள், ''ஜனநாயக'' நாடுகள் எவை, அல்லாதவை எவை, சிலியில் உள்ள பினோசெட் ஆட்சியையும் தென் ஆபிரிக்காவில் இனவாதிகளையும் போன்று—''சுதந்திரத்தை''ப் பரிந்துரைப்பவர்கள் என்று யாரை வர்ணிக்கவேண்டும், லெபனானைப் போல்—அங்கு மாத்திரமல்ல, பெரும் துப்பாக்கிகளின் இலக்காக மாறவேண்டியது யார் என்பதை நிர்ணயிக்கும் உரிமையைப் பெற விரும்புகின்றனர். வேறு வார்த்தையில் சொன்னால், சட்டபூர்வ அரசாங்கங்களைத் தூக்கி வீசுவது, ஒழுங்கு செய்யப்படும் பயங்கரவாதக் கொள்கையைக் கொண்டு நடத்துவது, பிரகடனம் செய்யப்படாத போர்களைத் தொடுப்பது வரையில், தம்மால் அனுமதிக்கப்படக் கூடியவை என அவர்கள் கருதும் யாவும் ஒழுக்கமானவையாகப் பிரகடனம் செய்யப்படுகின்றன. மத்திய கிழக்காக, தென் ஆபிரிக்காவாக, மத்திய அமெரிக்காவாக இருந்தாலும் சரி, அல்லது வேறு பிராந்தியங்களாக இருந்தாலும் சரி இருந்துவரும் பதற்றம் உக்ரமடைவதற்கும், புதிய கொதி தளங்கள் தோன்றுவதற்குமான பிரதான காரணம் இங்குதான் உள்ளது.

மோதல் நிலைமைகளை, நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பவர்களின் நலன்களை முழுமையாகக் கருத்திற்கொண்டு, சர்வதேசப் பந்தோபஸ்தை வலுப்படுத்தும் பரந்த நோக்கத்தினால் வழிகாட்டப்பட்டு, அமைதிபூர்வ மார்க்கங்கள் மூலம் தீர்க்கமுடியும், தீர்க்கப்படவேண்டும் இதில் நாம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

மத்திய கிழக்கு நிலவரத்தைப் பொறுத்த, வரைதனிப்பட்ட பேரங்கள் மூலமாகவோ, இராணுவத் தலையீடு மூலமாகவோ அங்கு சமாதானத்தை அடையமுடியாது என்பதை அங்கு நடைபெறும் துக்ககரமான சம்பவங்கள் காட்டுகின்றன. அப்பிராந்திய நிலைமையை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அனைத்தினதும் கூட்டு முயற்சிகள் மூலமாக மாத்திரமே தீவிரமாக மாற்றியமைக்க முடியும். மத்திய கிழக்கு சமாதானத் தீர்வுக்கான சோவியத் திட்டம் இதனையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் அரபு உலகிலும், அங்கு மாத்திரமன்றி, ஏனைய இடங்களிலும் பரவலான ஆதரவைப் பெற்றிருக்கிறது.

தொகுத்துக் கூறுகையில் நான் பின்வருமாறு வலியுறுத்த விரும்புகிறேன். அமெரிக்கா தனது இராணுவ வலிமையை எவ்வளவு தூரம் பெருக்கினாலும் சரி, உலகை மாற்றுவதில் அது வெற்றிவாகைகூட முடியாது. அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு ஏற்ப உலகம் வாழப் போவதில்லை.

மனிதகுலம் முகங்கொடுக்கும் கடமைகளைக் கையாளுவதில் எதார்த்தம், பொதுவான விவேகம், காரியார்த்த பூர்வ ஒத்துழைப்பு என்ற கொள்கைக்கு மாறிச் செல்வதே அவசியமாகவுள்ளது.

கேள்வி: வாஷிங்டனில் இருப்பவர்கள் புறவெளி சம்பந்தமாக சோவியத் யூனியனுடன் பேச்சுக்களை நடத்துவதற்கான தம்முடைய தயார் நிலையைத் தொடர்ந்தும் பிரகடனம் செய்து வருகின்றனர். உங்களின் அபிப்பிராயப்படி, புறவெளி இராணுவமயமாவதைத் தடுப்பது பற்றி பேச்சுக்களை நடத்துவதற்குரிய மெய்யான வாய்ப்புகள் யாவை?

பதில்: வாஷிங்டனில் இருப்பவர்கள் பேச்சுக்களுக்கான தம்முடைய தயார் நிலை குறித்து பேசுவது, வியன்னாவுக்குத் தூதுக் குழு ஒன்றை அனுப்புகின்ற தம்முடைய நோக்கங்களை அறிவிப்பது ஆகியன குறித்து பிரச்னைபடுவதில்லை. உண்மையில், அமெரிக்க நிர்வாகம் புறவெளி இராணுவமயமாக்கப்படுவதைத் தடுக்கும் பிரச்னையைத் தீர்ப்பதற்கு விரும்பவில்லை—அதன் அபிலாஷைகள் யாவும் அதனது எதிர்மாறான நிலைப்பாட்டை உலக மக்களிடமிருந்து மறைப்பதையும், விண்வெளிப் படைக்கலத் திட்டங்களை வகுத்து, உணரப்படுதலை நியாயப்படுத்துவதையும் திசைவழியாகக் கொண்டிருக்கின்றன.

எனவே, புறவெளி பற்றி பேச்சுக்களை நடத்துவதற்கான எம்முடைய ஆலோசனைகள் அமெரிக்கத் தரப்பிடமிருந்து ஸ்தூலமான பதிலைப் பெற்றிருக்கவில்லை. பேச்சுக்களின் நோக்கம் பற்றிய விவாதத்தின்போது, முதற்கண், பேச்சுக்களின் விஷயத்தையே அகற்றி விடுவதற்கு அது முயற்சித்தது. விண்வெளி ஆயுதங்களைத் தடைசெய்வதற்குப் பதிலாக, அங்கு பொதுவில் அணு ஆயுதங்களுடன் தொடர்புடைய பிரச்னைகளைப் பரிசீலனை செய்வது பற்றி, அமெரிக்கா வலியுறுத்தத் தொடங்கிற்று; வேறு வார்த்தையில் சொன்னால், அமெரிக்காவின் நன்கறிந்த நடவடிக்கைகளின் விளைவால் முறிந்துபோன ஜெனீவா பேச்சுக்களில் விவாதிக்கப்பட்ட பிரச்னைகளைப் பரிசீலனை செய்வது பற்றியே அது வலியுறுத்தியது.



இப்பேச்சுக்களில் என்னென்ன விஷயங்களை விவாதிக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் யோசனை தெரிவிக்கிறது? புறவெளிக்கு ஆயுதப் போட்டி பரவுவதை முடிவுக்குக் கொண்டு வருவதும், செய்மதி எதிர்ப்பு ஆயுதங்கள் உள்ளிட, தாக்குதல் விண்வெளி அமைப்புகளை முழுமையாகக் கைதுறந்துவிடுவதும் எப்படி என்பதே இவ்விஷயமாகும். வேறு வார்த்தையில் சொன்னால், புறவெளியிலிருந்து பூமிக்கும், பூமியில் இருந்து புறவெளியிலேயும் போர் அச்சுறுத்தலைத் தடுப்பதே நோக்கமாகும். முதல் நடவடிக்கையாக, பேச்சுக்களைத் துவங்கும் ஏககாலத்தில் விண்வெளித் தாக்குதல் அமைப்புகளைப் பரிசோதனை செய்வது மற்றும் ஈடுபடுத்தி வைப்பது குறித்து பரஸ்பரம் உச்சவரம்பு விதித்துக் கொள்ள வேண்டும் என நாம் யோசனை தெரிவிக்கிறோம்.

அத்தகைய ஒப்பந்தம் புறவெளியில் ஆயுதப் போட்டியைத் தடுப்பது மாத்திரமன்றி, ஏனைய கேந்திர ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது, குறைப்பது பற்றிய பிரச்னைகளின் தீர்வுக்கும் வாய்ப்பளிக்கும். அதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

விண்வெளி ஆயுதங்கள் பற்றிய பிரச்னையை அரைவாசியாகவோ அல்லது கால்வாசியாகவோ தீர்க்கமுடியாது. உதாரணமாக, ஒரு வகையான செய்மதி எதிர்ப்பு ஆயுதங்களைத் தடை செய்துவிட்டு மற்றொன்றை அனுமதிப்பதும், அல்லது செய்மதி எதிர்ப்பு ஆயுதங்களை மாத்திரமே தடை செய்துவிட்டு, ஏனைய விண்வெளி ஆயுத வகைகளுக்குப் பச்சைவிளக்குக் காட்டுவதும் அசாத்தியமானது.

இரண்டு விஷயங்களிலுமே, ஒரேமாதிரியான விண்வெளி ஆயுதங்களின் போட்டிதான் பிரச்னையாக உள்ளது. அமெரிக்காவின் நிலைப்பாடு இவ்விதமான போட்டியை சட்டபூர்வமாக்கும் விருப்பத்தைக் கொண்டது. அமெரிக்கத் தலைவர்கள் பகிரங்கமாகவோ அல்லது எம்முடன் அவர்கள் தொடர்பு கொண்டபோதோ விடுத்த அறிக்கைகளிலிருந்து இது புரிகிறது.

இவ்விதம், புறவெளி பற்றிய பிரச்னைக்கும், அதற்கு இசைவான பேச்சுக்களின் நோக்கங்களுக்கும் அமெரிக்கத் தரப்பு காட்டும் அணுகுமுறையானது எம்முடைய அணுகுமுறைக்கு நேர் எதிரானதாக உள்ளது. அப்படி இருக்க, பேச்சுக்களை நடத்துவதில் என்ன அர்த்தம் இருக்கமுடியும்? பேச்சுக்கள், பேச்சுக்களை நடத்துவதற்காக என்றில்லாமல், விண்வெளி ஆயுதங்களின் போட்டியைச் செயலூக்கமாகத் தடுத்துவிடக் கூடிய உடன்பாடுகளைக் காண்பதற்காகவே அவசியமாகவுள்ளன.

விண்வெளி இராணுவமயமாவதைத் தடுக்க கூட்டாக நடவடிக்கைகளை எடுப்பதற்கான தேவை அமெரிக்க ஆளும் வட்டாரங்களில் இறுதியாக உணரப்படும் என்று நம்புவோம்.

**கேள்வி:** சோவியத்—அமெரிக்க சம்பாஷணை துவக்கப்பட வேண்டுமென பல நாடுகளின் அரசியல் வட்டாரங்களில் விருப்பம் தெரிவிக்கப்படுகின்றது. இன்றைய நிலைமைகளில் சம்பாஷணை நடத்துவதற்கு, பேச்சுக்களை நடத்துவதற்கு உங்களின் மனோபாவம் என்ன?

**பதில்:** பாரிய அரசியல் பிரச்னைகள் குறித்து நடத்தப்படும் பேச்சுக்களும் சம்பாஷணைகளும் எதைப் பொருள்படுத்துகின்றன என்றால், நான் புரிந்து கொண்டுள்ளதைப் போல், இப்பிரச்னைகள் பற்றிய தீர்வுதான் உலகின் தலைவிதியை நிர்ணயிக்கிறது என்பதே இச் சம்பாஷணையின் பயன் குறித்து எம்மைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது.

நாம் எப்போதுமே கருத்தாழமுள்ள, ஸ்தூலமான பேச்சுக்களை ஆதரித்து வந்துள்ளோம். இருந்துவரும் பிரச்னைகளுக்கு இன்றைய அமெரிக்க நிர்வாகத்துடன் சேர்ந்து தீர்வுகாண்பதற்கான தேடலை இந்த நிலைப்பாடுகளிலிருந்தே நாம் அணுகி வருகிறோம். ஆயினும், பேச்சுக்களுக்கு வித்தியாசமான அணுகலையே நாம் எதிரிட்டுள்ளோம். அணு ஆயுதங்களை—கேந்திர மற்றும் நடுத்தர வீச்சு அணு ஆயுதங்களை—கட்டுப்படுத்துவது மற்றும் குறைப்பது போன்ற பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை எடுத்துக் கொள்வோம். இப்பேச்சுக்களில் ஈடுபடாமல் இருப்பதற்காக இப்போதைக்கு ஓராண்டுக்கு மேலாக வாஷிங்டன் நானாவித முகாந்திரங்களையும் தேடி வருகிறது. இம்முறை வேறு ஒரு விஷயத்துக்காக—புதிய பெருவீத இராணுவ வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக—பயன்படுத்தப்பட்டது.

ஜெனீவாவில் பேச்சுக்கள் துவங்கியதும், அமெரிக்கப் பிரதிநிதி அங்கு ஆக்கபூர்வ நோக்கங்களுடன் வரவில்லை, ஆனால், சோவியத் யூனியன் மீது அமெரிக்காவுக்கு இராணுவ அனுகூலங்களைக் கொடுக்கும் தீர்வுகளைப் பெறும் எண்ணத்துடனேயே வந்தார் என்பது தெளிவாகியது. உண்மையில் அத்தகைய பேச்சுக்களில் அர்த்தம் கிடையாது.

தரப்புக்களின் சமத்துவம் மற்றும் சம அளவு பந்தோபஸ்துக் கோட்பாடு கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டால் மாத்திரமே கருத்தாழமும் பயனுள்ளதுமான பேச்சுக்கள் சாத்தியமாகும். இந்தக் கோட்பாட்டை வாஷிங்டன் கைதுறந்தமையே ஜெனீவா பேச்சுக்கள் முறிவதற்குக் காரணமாகிற்று. வாஷிங்டன்தான் இப் பேச்சுக்களுக்குக் குழிபறித்தது.



இன்று விவாதமும் தீர்வும் தேவைப்படும் பிரச்னைகள் போதியளவு உள்ளன. அவற்றைக் கையாண்டே தீரவேண்டும்.

அனைத்து நாடுகளுடையவும் மக்களுடையவும் பந்தோபஸ்து நலன்களைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்ற உடன்பாடுகளைக் காணும் நோக்கமுடைய நேர்மையான, கருத்தாழமுள்ள பேச்சுக்களுக்கு எம்முடைய தயார் நிலையை நான் சர்வ நிச்சயத்துடன் மீண்டும் ஊர்ஜிதம் செய்கிறேன்.

சம்பாஷணை பற்றிய எமது புரிந்துணர்வு இத்தகையது தான்.

## சமாதானம், படைக்குறைப்புக்கான வாய்ப்புகள்

**அண்ட்ரீ குரோமிகோ**
**சோவியத் வெளியுறவு அமைச்சர்**

# படைக்குறைப்பும் அபிவிருத்தியும்

அணுப் போரைத் தடுப்பதும், ஆயுதக் குறைப்பு மற்றும் படைக்குறைப்பு சம்பந்தமாக ஸ்தூலமான நடவடிக்கைகளை எடுப்பதும் சமீபத்தில் அரசியல் சுதந்திரத்தைப் பெற்ற நாடுகள் உள்ளிட, அனைத்து நாடுகளதும் பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்வது போன்ற அதியவசரமான கடமையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாக உள்ளன என்று சோவியத் யூனியன் நம்புகிறது. படைக்குறைப்புக்கும் அபிவிருத்திக்கும் இடையில் உள்ள தொடர்பை இந்தக் கோணத்திலிருந்துதான் சோவியத் யூனியன் நோக்குகிறது.

ஏகாதிபத்திய சக்திகளால் விரைவுபடுத்தப்பட்டுவரும் ஆயுதப் போட்டி கூடுதல் செல்வாதாரங்களை உறிஞ்சி எடுக்கின்ற அதேசமயம் உலக மக்களின் கணிசமான பகுதியினர் போஷாக்கின்மையாலும் பிணியினுலும் வாடுகின்றனர், மூலாதாரக் கல்வியும் மருத்துவ உதவியும் மறுக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்து பெரும்பான்மையான உலக நாடுகள் கொண்டுள்ள ஆழ்ந்த கவலையை சோவியத் யூனியன் முழுமையாகப் பகிர்ந்து கொள்கிறது.

அமெரிக்காவும் அதன் நேட்டோ அணி நாடுகளும் ஆயுதப் போட்டியின் புதிய சுற்றைத் துவங்கி இருப்பதும், அதை புறவெளிக்குப் பரவச் செய்வதற்கு எடுக்கும் முஸ்தீபுகளும் அணுப் போரின் அபாயத்தை இன்னும் கூடுதலாக அதிகரிக்கின்றன: பெரும்பான்மையான உலக மக்களுக்கு உணவு வழங்குவது, புதிய விசை வளங்களை விருத்தி செய்வது, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது, நோயை ஒழித்துக் கட்டுவது போன்ற உலகளாவிய மானிடப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கமுடைய முயற்சிகளுக்கு இவை முட்டுக்கட்டையிடுகின்றன. உலக நாடுகள் பல அனுபவித்துவரும் பொருளாதார சிரமங்கள் இன்னும் கூடுதலாக



உக்ரமடைகின்றன, அதே சமயத்தில் அவற்றை அகற்றுவதற்கான வாய்ப்புகளும் அருகி வருகின்றன. இதன் விளைவுகளை உழைக்கும் மக்களே உணர்கின்றனர், அதன் பளுவைச் சுமக்கின்றனர்.

சோவியத் யூனியன் ஆயுதப் போட்டிக்குக் கடிவாளமிடவும் படைக்குறைப்பைச் சாதிக்கவும் மெய்யான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று விடாப்பிடியாக வற்புறுத்தி வருகிறது. இந்த நடவடிக்கைகள், வளர்முக நாடுகள் உள்ளிட, அபிவிருத்தி நோக்கங்களுக்காக நிதி விடுவிக்கப்படுவதைச் சாத்தியமாக்கும். இந்த நோக்கத்தைக் கொண்டே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கட்டமைப்பிற்குள்ளும் அதற்கு வெளியிலும் ஸ்தூலமான பல யோசனைகளை அது முன்வைத்திருக்கிறது.

ஆயுதப் போட்டிக்குக் கடிவாளமிடவும் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மேலதிகமான நிதிகளைப் பெறவும்கூடுதல் செயலூக்கமுள்ளதும் அதே சமயத்தில் சாதாரணமானதுமான வழிகளில் ஒன்று இராணுவ பட்ஜெட்டுக்களில் குறைப்புகளை மேற்கொள்வதாகும். இது சம்பந்தமாக சோவியத் யூனியன் சமர்ப்பித்துள்ள முன்முயற்சிகள் ஐக்கிய நாடுகள் சபையில் விரிவான அங்கீகாரத்தை வென்றெடுத்துள்ளன, ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபையில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் நாடுகள் தம்முடைய இராணுவ பட்ஜெட்டுக்களைக் குறைப்பது பற்றியும், இவ்விதம் சேமிக்கப்பட்ட செல்வாதாரங்களின் ஒரு பகுதியை வளர்முக நாடுகளுக்கு உதவி வழங்குவதற்காகப் பயன்படுத்துவது பற்றியும் சோவியத் யூனியன் சமர்ப்பித்த ஆலோசனைகளை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்து பத்து ஆண்டுகளுக்குக் கூடுதலாகிவிட்டது.

அது முதல், பொதுச் சபையின் இத்தீர்மானத்தை அமல் செய்வதற்காக சோவியத் யூனியன் விடாப்பிடியாக வற்புறுத்தி வருகிறது; இதை பெரும்பாலான ஐ. நா. உறுப்பு நாடுகளும் ஆதரிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் பயனுள்ள இத்தீர்மானம் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பது ஏன்? அமெரிக்காவும் அதன் நேட்டோ நேசசக்திகளும் தம்முடைய இராணுவ ஒதுக்கங்களைக் குறைப்பதற்கு விரும்பாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்; இந்த ஒதுக்கங்கள் அடுத்த நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் ராக்கெட் வேகத்தில் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

நாடுகளின் இராணுவச் செலவுகளைக் குறைக்கவும் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மேலதிக நிதிகளை விடுவிக்கவும் நடைமுறை நடவடிக்கைகளை அங்கீகரிப்பது சர்வதேசப் பதற்றம் அதிகரித்துவரும் நிலைமைகளில் குறிப்

பிடத்தக்க அளவுக்குக் காலோசிதமானதாகி வருகிறது. முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகள் பல தற்போது அனுபவித்துவரும் மோசமான பொருளாதர சிரமங்களும் நெருக்கடி இயல்நிகழ்வும் இத்தகைய நடவடிக்கைகளை அவசியமாக்குகின்றன. வளர்முக நாடுகளில் இப்போது மிகு முனைப்பாக இருக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்னை களின் தீர்வுக்காக செல்வாதாரங்களை ஆற்றுப்படுத்தும் வாய்ப்புகளை மெய்யான படைக்குறைப்பு நடவடிக்கைகளே உருவாக்க முடியும்.

பொருளாதார அபிவிருத்திப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதோடு படைக்கலங்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் குறைக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பல நாடுகள், குறிப்பாக வளர்முக நாடுகள் விடுக்கின்ற கோரிக்கையை சோவியத் யூனியன் புரிந்துணர்வுடன் கருத்திற் கொள்கிறது. இதற்கான வாய்ப்புகளும் இருக்கவே செய்கின்றன.

ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் படைக்குறைப்புப் பிரச்னைகள் குறித்து சோவியத் யூனியனும் பிற சோஷலிஸ நாடுகளும் சமர்ப்பித்துள்ள சோசனைகளை நடைமுறைப் படுத்துவது அபிவிருத்தி நோக்கங்களுக்காக கணிசமான செல்வாதாரங்களை விடுவிப்பதில் முடிவடையும் என்பதில் ஐயமில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அணு ஆயுதங்களை வைத்திருக்கும் வல்லரசுகளுக் கிடையிலான உறவுகளில் சில விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பது குறித்து உடன்பாடு காணுவதன் அவசியத்தை நடைமுறைப்படுத்துவது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

ஸ்டீபன் ஸாலயேவ்
தொழிற்சங்கங்களின் அகில யூனியன் மத்தியக் கவுன்சிலின் தலைவர்

# சமாதானப் போராட்டத்தில் சோவியத் தொழிற்சங்கங்கள்

அமெரிக்காவின் பிற்போக்கான ஏகாதிபத்திய வட்டாரங்களுடையவும், நேட்டோவில் உள்ள அவற்றின் நேசசக்திகளுடையவும் ஆக்கிரமிப்புக் கொள்கை காரணமாகவே உலகின் மீது அணுப் போர் அபாயம் கவிந்து வருகிறது. இது, சகல நாடுகளிலும் கண்டங்களிலுமுள்ள மக்களை சமாதானத்துக்கான போராட்டத்தில் இணையச் செய்துள்ளது. சோவியத் தொழிற்சங்கங்கள் இப்போராட்டத்தில் செயலூக்கமாகப் பங்கெடுக்கின்றன.

சர்வதேச தொழிற்சங்க இயக்கம் ஒரு வலுவான, செல்வாக்குமிக்க சக்தியாகத் திகழ்கிறது, உலகளாவிய சமூக வளர்ச்சியின் மீதான அதன் தாக்கம் வளர்ந்தோங்கி வருகிறது. உழைக்கும் மக்களின் மிகப்பெரிய வெகுஜன ஸ்தாபனங்கள் என்ற வகையில் தொழிற்சங்கங்களின் அடிப்படைத் தன்மையும், அவற்றினுடைய செயல்பாடுகளின் இயல்பும், அவை நிறைவேற்ற வேண்டியுள்ள கடமைகளும் சமாதானத்தைப் பேணிக்காக்கும் இலட்சியத்துக்கான அவற்றின் ஆழமான கடப்பாட்டை ஸ்தூலமாக நிர்ணயம் செய்கின்றன. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் பாட்டாளிகளது வர்க்கப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களிலேயே போர் எதிர்ப்புப் பாரம் பரியங்கள் சம்பந்தப்பட ஆரம்பித்தன. தொழிலாளி வர்க்கம் சமுதாயத்தில் தான் கொண்டுள்ள சமூக, அரசியல் நிலைப்பாடு காரணமாக எவ்விதத்திலும் யுத்தங்களில் ஆர்வங் கொண்டிருக்கவில்லை. போர்களுக்கான காரணங்கள் முதலாளித்துவத்தின் சமூக அமைப்பில் வேரூன்றியுள்ளன. போர்கள் உழைக்கும் மக்களுக்கு அடிப்படையிலேயே விரோதமானவை; மேலும் அவை தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்கள், இலட்சியங்களுடன் மோதுகின்றன.

இவற்றை ஆதாரமாகக் கொண்டே, சோஷலிஸத்தின் வெற்றியோடு உழைக்கும் வர்க்கம் போர்களுக்கு முடிவு கட்டிவிடும் என்று கார்ல் மார்க்ஸும் எங்கெல்சும் முடிவு செய்தனர்; ஏனெனில், இனங்களுக்குள் நிலவும் வர்க்கங்களுக்கிடையிலான குரோதங்கள் மறைவதுடன் அவற்றுக்கு இடையிலான குரோத உணர்வுகளும் துண்டிக்கப்பட்டு விடும்; மேலும் ''புதிய சமுதாயம் மலரும்; அதன் சர்வதேச விதி சமாதானமாக இருக்கும். ஏனெனில் அதன் தேசிய ஆட்சியாளர் எல்லா இடங்களிலும் உழைப்பாளராகவே இருப்பர்!''

யுத்தம் சொல்லொணா அழிவையும் துன்பத்தையும் உழைக்கும் மக்கள் மீது சுமத்துகிறது; மனித சமுதாயம் நின்று நிலவுவதற்கான நிலைமைகளுக்கே குழிபறிக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று வி.இ. லெனின் பல தடவைகள் தெரிவித்தார். ஏகாதிபத்தியத்தையும் அது உற்பவிக்கும் ஆக்கிரமிப்பையும் பிற்போக்கான போர்களையும் செயலூக்கமாக எதிர்த்துப் போராடும் ஆற்றலைக் கொண்ட சமூகச் சக்தி தொழிலாளி வர்க்கம் மட்டுமே என்பதை அவர் குறிப்பிட்டார். ''ஏகாதிபத்தியமும் ஏகாதிபத்தியப் போர்களும் உருவாக்கியுள்ள முட்டுக்கட்டையிலிருந்து பாட்டாளி வர்க்கக் கம்யூனிஸ்ட் புரட்சி மாத்திரமே மனிதகுலத்தை வெளியே இட்டுச் செல்ல முடியும்.''

மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் காரணமாக, உழைக்கும் மக்களின் வர்க்க நலன்கள் வரலாற்றில் முதல் தடவையாக உலகினுடைய முதலாவது தொழிலாளி, விவசாயிகளது அரசினுடைய கொள்கையின் அடிப்படையாகியது. சோவியத் ருஷ்யாவின் முதலாவது சட்டவாக்க நடவடிக்கையில்—சமாதானம் பற்றிய ஆணையில்—இது தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வெளிப்பாடு பெற்றுள்ளது.

## சர்வதேசப் பிணைப்புகள்

சமாதானத்துக்காகவும் ஆயுதப் போட்டிக்குக் கடிவாளமிடுவதற்காகவுமான போராட்டத்தில் உழைக்கும் மக்களின் சர்வதேச ஒருமைப்பாட்டுப் பிரச்னைகளுக்கு, சோவியத் தொழிற்சங்கங்களுக்கும் பிற நாடுகளில் உள்ள தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான எல்லாப் பிணைப்புகளிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. நாம் பின்வரும் முக்கிய மார்க்கங்களில் முயற்சிகளைச் செய்கிறோம்.

முதலாவதாக, 1981ல் சோ. க. க.வின் 26-வது காங்கிரஸ் 1980ம் ஆண்டுகளுக்காக முன்வைத்த சமாதான வேலைத் திட்டத்தையும், சோவியத் அரசினதும்



ஏனைய சோஷலிஸ நாடுகளதும் சமாதான முன்முயற்சிகளையும் மேலும் நடைமுறைப்படுத்துவதற்காக எம்மாலான சகலதையும் செய்து வருகிறோம். இவை போரைத் தடுத்து நிறுத்தவும், ஆயுதப் போட்டிக்கு முடிவுகட்டவும் படைக் குறைப்பைத் துவங்கவும் நிர்ணயமான வழிகளைக் காட்டுகின்றன. இரண்டாவதாக, ஏகாதிபத்தியத்தின் ''சோவியத் இராணுவ அச்சுறுத்தல்'' பற்றிய கற்பனையைத் திட்டவட்டமாக எதிர்க்கிறோம்; சர்வதேசப் பதற்றம் ஆழமடைவதற்கான மெய்யான காரணங்களை அம்பலப்படுத்துகிறோம்; உலக ஏகாதிபத்தியத்தினால் திணிக்கப்படும் ஆயுதப்போட்டியின் ஆபத்தையும், அதன் சமூகக் காரணிகளையும், உழைக்கும் மக்களது அடிப்படையான ஜீவாதார நலன்களுக்கு அவை மாறாக இருப்பதையும் பிறநாடுகளில் உள்ள உழைக்கும் மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். ஆயுதப் போட்டி முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களின் சமூக—பொருளாதார நிலைமீது பயனுள்ள தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று முநலாளித்துவப் பிரசாரகர்கள் மேற்கொள்ளும் ஆதாரமில்லாத, பிழையான குற்றச்சாட்டுகளை நாம் முறையாகவும் நம்பகமாகவும் அம்பலப்படுத்துகிறோம். நான்காவதாக, போர் அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டத்தில், சமாதானத்துக்காகவும் படைக்குறைப்புக்காகவுமான போராட்டத்தில் எல்லாத் தொழிற்சங்கங்களதும் சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தினதும் செயல் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கான போக்கை நாம் முரணின்றி கடைப்பிடித்து வருகிறோம்.

இக்கடமைகள் யாவும் சோவியத் தொழிற்சங்கங்களால் தம்முடைய பல்வேறு நடைமுறை நடவடிக்கைகளில் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. சோவியத் ஒன்றியத்தில் சமீப ஆண்டுகளிலே இடம் பெற்ற சகல போர் எதிர்ப்பு இயக்கங்களிலும் எமது நாட்டுத் தொழிற்சங்கங்களே பிரதான அமைப்பாளர்களாய், செயலூக்கமான பங்காளிகளாய் விளங்கியுள்ளன.

சமாதானத்துக்காகவும் படைக்குறைப்புக்காகவும் ஆயுதப் போட்டிக்கு எதிராகவுமான போராட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள பிரச்னைகளுக்கு 145 நாடுகளின் தொழிற்சங்கங்களுடன் சோவியத் தொழிற்சங்கங்கள் கொண்டுள்ள உறவுகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. சோஷலிஸ, முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் கூடுதலான தொழிற்சங்கத் தூதுக்குழுக்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்கின்றன; அறுநூறுக்கும் மேற்பட்ட சோவியத் தொழிற்சங்கத் தூதுக் குழுக்கள் பிற நாடுகளுக்கு விஜயம் செய்கின்றன. அத்தகைய

தொடர்புகள் போர் எதிர்ப்புப் போராட்டத்தில் அழுத்து கின்ற பிரச்னைகளின் தீர்வுக்கு வெவ்வேறு அணுகுமுறை களைத் தருகின்றன.

சோவியத் தொழிற்சங்கங்கள் போர் எதிர்ப்புப் போராட்டம் மற்றும் ஆயுதப் போட்டியின் சமூக— பொருளாதார அம்சங்களுடன் சம்பந்தப்பட்ட பலதரப்பு தொழிற்சங்கக் கடமைப் பொறுப்புக்களை மேற்கொள் கின்றன. உலக சமாதான சக்திகளது மகாநாடுகள் அனைத்திலும் அவையே இப்பிரச்னைகளை முன்வைக்கின்றன.

ஏகாதிபத்தியத்தின் துணிச்சலான போக்கு மனித குலத்துக்கு விடுத்துள்ள பேரபாயத்தை நன்குணர்ந்துள்ள சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிஸ நாடுகளின் உழைக்கும் மக்களும் தொழிற்சங்கங்களும் எதிர்காலத் தைத் துணிவுடன் நோக்குகின்றன; ஏனெனில் அவை தம்முடைய நாடுகளின் அளப்பரிய ஆற்றல்களை அறிந் துள்ளன.

''கொம்யூனிஸ்ட்''
சஞ்சிகையிலிருந்து

பியோதர் பனுச்சின்
சோவியத் ஒன்றியத்தின் முதலாவது
பிரதி கல்வி அமைச்சர்

# சோவியத் பாடசாலைச் சீர்திருத்தம்

சோவியத் அரசு அனைத்து மக்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த தாக்கிதை, பொது மற்றும் தொழில்முறைப் பாட சாலைகளின் சீர்திருத்தத்துக்கான வழி காட்டி நெறிகளை அங்கீகரித்திருக்கிறது. அது பரந்த உழைக்கும் மக்கள் பகுதி யினரது விருப்பங்களைக் கணக்கில் எடுத்தே வகுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் மீதான விவாதத்தில் 12 கோடி மக்கள் பங்கு கொண்டனர், கட்சி, சோவியத் ஸ்தாபனங்கள் பல்லாயிரக் கணக்கான ஆக்கபூர்வ ஆலோசனைகளைப் பெற்றன. 1985-1990ம் ஆண்டுகளில் மேற் கொள்ளப்படவிருக்கும் இப்பாடசாலைச் சீர் திருத்தம் சோவியத் ஒன்றியத்தில் கல் வியை புதிய, உயர்ந்த மட்டத்துக்கு உயர்த் தும்.

பொதுப் பாடசாலைச் சீர்திருத்தத்தின் நோக்கம் கல்வியின் தரத்தை மேலும் மேம்படுத்துவதும், குழந்தை களையும் இளம் பராயத்தினரையும் வளர்த்து ஆளாக்கு வதும் ஆகும். கல்வியின் கட்டமைவை மாற்றவும் கல்விப் பாடத்திட்டத்தை மேலும் ஓராண்டினால் நீடிக்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பத்தாண்டுப் பாடத் திட்டத் தைக் கொண்டுள்ள நடுநிலைப் பாடசாலைகள் மேலதிகமாக ஓராண்டைப் பெறும். இது பாடசாலைக்குச் செல்கின்ற ஆரம்ப காலத்தில்தான், பிற்பகுதியில் அல்ல. அதாவது, பிள்ளைகள் ஆறு வயதாக இருக்கும்போது பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். 1990/91 பாடசாலை ஆண்டி

லிருந்து ஆறு வயதையடைந்த ஏறக்குறைய எல்லாக் குழந்தைகளுமே பாடசாலைக்குச் செல்வர். சோவியத் பொதுப் பாடசாலையின் கட்டமைவு பின்வருமாறு.

ஆரம்பப் பாடசாலை 1-4 படிவங்கள்
பூரணமற்ற நடுநிலை (9-ஆண்டு)
பாடசாலை 1-9 படிவங்கள்
பொது நடுநிலைப் பாடசாலை 10-11 படிவங்கள்

பெருமளவிலான பணி ஆற்றப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தில் புதிய பாடத் திட்டங்களையும் பாடங்களையும் வகுத்துரைப்பது, பாடசாலைகளுக்குப் தேவையான சகல புதிய போதனு உபகரணங்களையும், போதனைக்கான தொழில்நுட்ப வழிவகைகளையும் வகை செய்வது ஆகியனவும் அடங்குகின்றன. வகுப்புக்களில் உள்ள மாணவர் குழுக்களைப் படிப்படியாகக் குறைக்கவும், தனித் தனிப் பாடங்களைப் படிப்பதற்காக விசேட குழுக்களை உருவாக்கவும், எல்லாப் பாடசாலைகளுக்கும் நவீனமான பரிசோதனைக் கூடங்களையும் மின்கணிதப் பொறி அறைகளையும் அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இச் சீர்திருத்தத்தின் பிரதான நோக்கம் சோவியத் இளைஞரின் தொழிற் கல்வியை மேம்படுத்துவதாகும். அது தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. தொழிற் பயிற்சியில் அடிப்படை மேம்பாட்டை அடைவதற்காகவும், மாணவர்களை வளர்த்து ஆளாக்குவதற்காகவும், தொழில்களின் அடிப்படைகளில் மாணவர்கள் தேர்ச்சி பெற உதவுவதற்காகவும் வேலைத்தளப் பயிற்சிக்கு கூடுதல் நேரம் செலவிடப்படுவதை இச்சீர்திருத்தம் முன்வைக்கிறது. இதைவிட, சமூக ரீதியில் பயனுள்ள கட்டாய வேலையும் முதலாம் படிவம் நீங்கலாக ஏனைய எல்லாப் படிவங்களுக்கும் அறிமுகஞ் செய்யப்படும். எல்லாமாக, பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் தொழில் கல்விக்காகவும் சமூக ரீதியில் பயனுள்ள உற்பத்திப் பணிக்காகவும் இரண்டாயிரத்துக்கும் கூடுதலான மணித்தியாலங்கள் ஒதுக்கப்படும்.

தொழிற்துறைத் தொழிலகங்களிலுள்ள பயிற்சி வேலைத்தளங்களிலும், கூட்டு மற்றும் அரசாங்கப் பண்ணைகளிலுள்ள பயிற்சி—பரிசோதனைப் பிரிவுகளிலும், பாடசாலைகளுக்கிடையிலான பயிற்சி—உற்பத்திப் பேட்டைகளிலும், பாடசாலை வேலைத் தளங்களிலும் பல்வேறு பயிற்சி உற்பத்தி இணையங்களிலும் மாணவர்கள் சமூக ரீதியில் பயனுள்ள உற்பத்திப் பணியில் ஈடுபடுவர். 1985ம் ஆண்டுக்கும் 1990 ஆண்டிற்கும் இடையே மாணவர்களின் தொழிற் கல்வி மற்றும் கட்டாயப் பணிக்கான புதிய வேலைத் திட்டங்கள் அறிமுகஞ் செய்யப்படும்.



வழிகாட்டி நெறிகளின் கீழ், வருங்காலத்தில் பொதுக் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக் கல்விக் கூடங்கள் ஒன்றாகக் கொண்டு வரப்பட்டு இணைக்கப்பட்டுவிடும்.

மாணவர்களின் சித்தாந்தவியல் மற்றும் அரசியல் கல்வியில் தலையாய முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் அவர்களின் உலகக் கண்ணோட்டத்தை மார்க்ஸியம்-லெனினியத்தின் அடிப்படையில் உருவாக்குவதாகும். சோவியத் தேசபக்தி மற்றும் சோஷலிஸ சர்வதேசிய உணர்வில் அவர்களுக்குக் கல்வியூட்டுவதும் முக்கியமானதாகும். இதற்கு, உலகிலும் சோவியத் ஒன்றியத்திலும் இடம் பெறும் சமூக இயல்நிகழ்வை சுயாதீனமாக மதிப்பீடு செய்யும் அவர்களது ஆற்றலை ஊக்குவிப்பது ஜீவாதாரமானது. இப்பிரச்னைகள் யாவும் சீர்திருத்தத்தில் பிரதிபலிப்பு பெற்றுள்ளன.

ஒழுக்கவியலைப் பொறுத்த வரையில், மாணவர்கள் கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் கோட்பாடுகள், விதிகளின் அடிப்படையிலும், சோஷலிஸக் கூட்டமைப்பின் விதிகளையும் சோவியத் சட்டங்களையும் ஆழமாகக் கற்றுத் தேர்வதன் அடிப்படையிலும் வளர்த்து ஆளாக்கப்படுகின்றனர். சோவியத் மனிதனுக்குரிய மிகச் சிறந்த இயல்புகள் அவர்களுக்கு ஊட்டி வளர்க்கப்படுகின்றன.

சீர்திருத்தத்தில் மிகப் பெரும் கவனம் இராணுவ-தேசபக்தக் கல்விக்குச் செலுத்தப்படுகிறது. இதன் பொருள் யாதெனில் தாயகத்தின் பாதுகாப்புக்கான பொறுப்புணர்வை மாணவர்களுக்கு ஊட்டி வளர்ப்பதில் பாடசாலை அக்கறை கொள்ளும் என்பதாகும். இராணுவ நெறிகளின் பிரதான பிரமாணங்களைத் திட்டவட்டமாகக் கற்றுணரவும், அவசியமான இராணுவ மற்றும் தொழில்நுட்ப அறிவையும் நடைமுறைத் திறமைகளையும் பெற்றுக் கொள்ளவும் இது அவர்களுக்கு உதவும். இந்த நோக்கத்துக்காக அடிப்படை இராணுவப் பயிற்சியின் உள்ளடக்கத்தையும் முறைகளையும் மேம்படுத்தவும், உடற்பயிற்சி, சித்தாந்த மற்றும் நடைமுறைப் பயிற்சிகளின் செயலூக்கத் தன்மையை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

பாடசாலை ஆளணி சம்பந்தமாகவும் பெரும் பணியாற்றப்படும். இதில் ஆசிரிய பயிற்சியின் தரத்தைக் கணிசமாக மேம்படுத்துவதும் அடங்கும். இந்த நோக்கத்துக்காக ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் பாடத்திட்டங்கள், அட்டவணைகளில் மாற்றங்கள் அறிமுகஞ் செய்யப்படும்.

கூடுதலான ஆசிரியர்களும் போதனையாளர்களும் பயிற்றுவிக்கப்படுவர். வளர்ந்துவரும் நிபுணர்களது தேவையை மனதிற்கொண்டு 1985-1990ல் பள்ளிக்கு முந்தியதான நிறுவனங்களுக்காக 400 ஆயிரத்துக்கும் கூடுதலான ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுவர். ஆரம்பப் படிவங்களுக்காக 300 ஆயிரம் ஆசிரியர்களும், 4-10(11) படிவங்களுக்காக 640 ஆயிரம் ஆசிரியர்களும், எல்லாமாக 1,350,000 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுவர்.

இறுதியாக, ஆசிரியர்களுடையவும் பிற கல்வித்துறை ஆளணிகளுடையவும் சம்பளங்களை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், போதனையாளர்கள், முறைமையியலாளர்கள், தொழிற்பயிற்சிப் போதனையாளர்கள் மற்றும் பிற ஆளணிகளின் புதிய சம்பள, ஊதிய வீதங்கள் உருவாக்கப்படும். சோவியத் ஒன்றியத்தின் கல்வி அமைச்சுக் கட்டமைப்புக்குள் ஆசிரியர்களின் சம்பளம் 35 சதவீதம் அதிகரிக்கவுள்ளது. இந்த அதிகரிப்பினால் அரசாங்கத்துக்கு மொத்தம் 3,500,000,000 ரூபிள்கள் செலவாகும்.



அலெக்ஸி லெபதேவ்
செர்ஹீ கிரிபனேவ்

பல்துறைப் பயிற்சி நிலையம்

# சமாதான சகவாழ்வும் இன்றைய உலகும்

1980ம் ஆண்டுகள் சர்வதேச நிலவரம் மிகவும் மோசமடைந்ததைக் கண்டன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு வட்டாரங்களும் அவற்றின் நேட்டோ நேச அணிகளும் சோஷலிஸத்துடனான வரலாற்று பூர்வமான போட்டிக்கு இராணுவ மோதல் மூலம் தீர்வுகாண்பதன் மீது பகிரங்கமாக நம்பிக்கை வைத்துள்ளன. உலகளாவிய அணுவாயுத மோதல் தவிர்க்க முடியாதது என்ற கருத்திற்கு மனிதகுலம் பழக்கப் பட்டுப் போகும் வண்ணம் பூர்ஷ்வா பிரச்சார இயந்திரத்தை அவை அதிவேகமாக முடுக்கிவிட்டுள்ளன.

ஏகாதிபத்தியத்தினால், முதலாகவும் முதன்மையாகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த சிக்கலான நிலைமை பின்வரும் ஜீவாதாரமான கேள்வியை எழுப்புகிறது. அணுவாயுத சர்வ நாசத்தை மனிதகுலத்தால் தவிர்க்க முடியுமா? மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள் மத்தியில் சமாதான சகவாழ்வு பற்றிய கருத்தமைப்பில் இக் கேள்விக்கான பதிலைக் காண முடியும். இதுவே, சோவியத் அயல்துறைக் கொள்கையின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாக விளங்குகிறது. ''மாபெரும் லெனின் மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வு பற்றிய கோட்பாட்டை எமக்கு விட்டுச் சென்றுள்ளார். இக்கோட்பாட்டின் பாலான எம்முடைய உறுதிப்பாடு மாற்றமடையாமல் இருக்கிறது. அணு ஆயுதங்களின் இலக்கை குறி தவறாது தாக்கக்கூடிய ஏவுகணைகளின் யுகத்தில் அது மக்களுக்கு முன்னைவிட அவசியமாகவுள்ளது'', என்று கொன்ஸ்தாந்தின் செர்னென்கோ வலியுறுத்தினார்.

# சகவாழ்வுக் கருத்தமைப்பு

சமாதானமும் சோஷலிஸமும் பிரிக்க முடியாதவை. குறிப்பாக சோஷலிஸத்தின் நிர்மாணமும் அதனுடைய சர்வதேச நிலைப்பாடுகளின் வலுப்படுத்தலும்தான் எல்லாக் காலங்களுக்குமாகப் போரை சட்ட விரோதமான தாக்கும் பிரச்னையை நிகழ்ச்சி நிரலில் இடுவதற்கான ஆதாரத்தளத்தை முன்வைத்துள்ளது. அதுபோலவே, பூமியில் நிரந்தர சமாதானத்துக்கான போராட்டம் மனித குலத்தின் சமூக முன்னேற்றத்திற்குரிய தவிர்க்க முடியாத நிபந்தனையாகும். இந்த நோக்கங்களுக்கிடையிலான இயக்கவியல் உறவுமுறையை லெனின் நிர்ணயித்துக் காட்டினார்.

இளம் சோவியத் குடியரசு தனது முதலாவது வெளிநாட்டுக் கொள்கைத் தாக்கீதில்-சமாதானம் பற்றிய ஆணையில், இரத்தக் களரியை நிறுத்துமாறும், எல்லா நாடுகளுடையவும் மக்களுடையவும் சுயநிர்ணயத்தின் அடிப்படையில் கேர்ப்புக்களும் இழப்புக்களும் இல்லாமல் நீதியான சமாதான ஒப்பந்தத்தில் கைகசாத்திடுமாறும் போரில் ஈடுபட்டிருந்த நாடுகளையும் மக்களையும் கேட்டுக் கொண்டது. லெனினின் இந்த ஆணையினுடைய வரலாற்றுச் சிறப்பு சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியக் கோட்பாடுகளை அது பிரகடனம் செய்தது என்பதிலேயே தங்கியுள்ளது. சமாதானத்துக்காகவும் மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளிடையே சகவாழ்வுக்காகவும் போராடுவது, பாட்டாளி வர்க்க சர்வதேசியம், அனைத்து மக்களதும் பரிபூரண சமத்துவம், இறைமைக்கும் சுதந்திரத்திற்கும் மரியாதை, உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல் என்பனவே இம் முக்கியக் கோட்பாடுகள் ஆகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இரு சமூக அமைப்புகளைச் சேர்ந்த நாடுகளுக்கிடையிலான உறவுகளில் சமாதான சகவாழ்வின் வீச்செல்லை கணிசமாக விரிவடைந்தது. இதற்குக் காரணம் வர்க்க, அரசியல் சக்திகளின் அணி சேர்க்கையில் சோஷலிஸத்துக்குச் சாதகமாக மாற்றம் ஏற்பட்டமைதான். முதலாளித்துவ வல்லரசுகள் சோஷலிஸ நாடுகளுடனான தமது உறவுகளின் அடிப்படையாக சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளவும், அவற்றுடன் விரிவான அளவில் பொருளாதார, கலாசாரப் பந்தங்களை உருவாக்கத் தொடங்கவும் வேண்டியிருந்தது.

சமாதான சகவாழ்வுக் கருத்தமைப்பு அதிகரித்த அளவில் ஆதரவைத் தற்போது பெற்று வருவதற்கு, அது சமூக முன்னேற்றத்துக்கான சாதகமுள்ள முன்தேவையாக இருப்பது மாத்திரம் காரணமல்ல. நாடுகளின் பாசறைகளில் வெகுஜனப் பேரழிவு ஆயுதங்களின் தோற்றம்,



அவற்றைப் பயன்படுத்துகையில் மனித குலத்தின் நாகரிகத்துக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்ற நிலைமையை உருவாக்கியுள்ளது. இந்த சுய-அழிவு அச்சுறுத்தலை முன்னுணர்ந்த லெனின் 1918ம் ஆண்டில் பின்வருமாறு எழுதினார்: ''வளர்ச்சியடைந்த நாடுகளுக்கிடையிலான போர் மிகப் பெரும் குற்றம் மாத்திரம் அல்ல! ஆனால் அது ''மனித சமுதாயத்தின் அடித்தளங்களையே அழித்துவிடும்'' என்றார் அவர்.

# அமெரிக்கா இணக்க அமைதியை நிராகரித்தது ஏன்?

பிரதான முதலாளித்துவ நாடுகளின், குறிப்பாக அமெரிக்காவின், ஏகாதிபத்திய வட்டாரங்கள் 1970ம் துவக்கத்தில் இணக்க அமைதியை ஏற்றுக்கொள்ளவும் 1980ம் ஆண்டுகளின் திருப்பத்தில் அதை உதாசீனம் செய்யவும் நிர்ப்பந்தித்தது எது?

சோவியத் யூனியனிலும் ஏனைய சோஷலிஸ நாடுகளிலும் யுத்த பிற்கால சமூக-பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் வேலைத் திட்டங்கள் ஈட்டிய வெற்றி சர்வதேச நிகழ்வுகளின் போக்கு மீது சோஷலிஸத்தின் செல்வாக்கையும் மதிப்பையும் கணிசமாக அதிகரித்தது. ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் கணிசமான அளவுக்குக் குன்றத் தொடங்கியது. அதன் உள் முரண்பாடுகள் அதிகரித்தன, முதலாளித்துவ சமுதாயம் பூரணமாகவும் மாற்றமுடியாத விதத்திலும் வரலாற்றுபூர்வ முன்முயற்சிகளை இழந்தது. சோஷலிஸத்துடனான போட்டியில் ஒன்றன் பின் ஒன்றாகப் பின்னடைவுகளைச் சந்தித்தது.

சமூக முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தவும் முதலாளித்துவத்துக்குப் புத்துயிரளிக்கவும் இணக்க அமைதி துணைபுரியும் என்று ஏகாதிபத்திய பிற்போக்கு வட்டாரங்கள் நம்பின. அது நிறைவேறவில்லை. இணக்க அமைதி படுதோல்விகளிலிருந்து அவற்றைப் பாதுகாக்கவில்லை. அதைத் தொடர்ந்து 'இணக்க அமைதியின் விதிமுறைகளை' சோவியத் யூனியனும் பிற சோஷலிஸ நாடுகளும் மீறி வருகின்றன என்று அவற்றின் மீது பழிசுமத்துவதற்கு முஸ்தீபுகள் செய்யப்பட்டன. 'சோவியத் அச்சுறுத்தல்' பற்றிய கட்டுக் கதைகளுக்குப் புத்துயிரளிக்கப்பட்டது. இராணுவக் கேந்திர சமநிலையை சோவியத் யூனியன் உடைத்து வருவதாகக் கூறும் நானாவிதமான கண்டுபிடிப்புக்களுக்கும் உயிரூட்டப்பட்டது. ஆயினும் இந்த சோவியத்-விரோதப் பிரச்சாரத்தின் உண்மையான நோக்கத்தை உலக மக்களிடமிருந்து மறைப்பது அதற்கு அசாத்தியமாகியது.

## அனைத்து மக்களினதும் தேவை

அமெரிக்காவினுடையவும் அதனது நேச அணிகளுடையவும் அதிசூரத்தனக் கொள்கையை, சர்வதேச உறவுகளில் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தில் சோஷலிஸ நாடுகள் மேற்கொள்ளும் முனைப்பான முயற்சிகளைக் கொண்டு எதிர்க்க வேண்டும். அனைத்து நாடுகளும் இந்தக் கோட்பாடுகளை வழுவாது நடைமுறையில் கடைப்பிடிக்கச் செய்யவேண்டும்.

இதில் பெரும் பங்கு உலகில் அரசியல், இராணுவச் சக்திகளின் உண்மையான சமநிலை மற்றும் அணிசேர்க்கை மீதே சார்ந்திருக்கிறது. வார்ஸா ஒப்பந்த ஸ்தாபனத்துக்கும் நேட்டோவுக்கும் இடையே இராணுவக் கேந்திர சமநிலையைப் பேணிக்காப்பது, இருந்துவரும் சுமாரான சமநிலையைக் குலைக்கவும் இராணுவ மேலாண்மையைச் சாதிக்கவும் அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் மேற்கொள்ளும் முஸ்தீபுகளைத் தடைப்படுத்துவது ஆகியவற்றின் முக்கியத்துவம் இத்தகையதுதான்.

இந்தச் சமநிலையைப் பேணுவதில் சோஷலிஸ நாடுகள் மாத்திரம் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. இந்த விருப்பத்தை பல முதலாளித்துவ அரசாங்கங்களும் அணிசேரா நாடுகளும் பகிர்ந்து கொள்கின்றன. வாஷிங்டனின் இராணுவ மேலாண்மைக் கோரிக்கை முதலாளித்துவ உலகில் அதிகரித்த அளவில் வெகுஜன சக்திகளின் பதிலடியைப் பெற்று வருகிறது.

உலகில் உள்ள அனைத்து மக்களும் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதற்கு விதிவிலக்கு விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய ஏகபோக முதலாளிகள்தான். இவர்கள் மனிதகுலத்தின் ஏகப்பெரும்பான்மையானோரின் இழப்புகளில் தம்முடைய செல்வத்தைப் பேணி, பெருக்கிக் கொள்வதைப் பற்றியே கவனம் செலுத்துகின்றனர்.

அனைத்து கண்டங்களிலும் வாழும் மக்கள் அமெரிக்காவின் அதிசூரத்தனக் கொள்கையினால் ஏற்படக்கூடிய அபாயத்தை நன்கறிந்துள்ளனர்.

மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வு பற்றிய கொள்கை உண்மையிலேயே அனைத்து மக்களுடைய ஆதரவையும் பெற்றுத் திகழ்கிறது. இதனுடைய கோட்பாடுகளின் ஜீவ வலுவுக்கு ஓர் உத்தரவாதமும், வெற்றிக்கு முன்தேவையும் இதுதான். மக்களின் தேர்வு சர்வ நிச்சயமானது: அது வாழ்வும் முன்னேற்றமுமே.

''சர்வதேச விவகாரங்கள்''
சஞ்சிகையிலிருந்து

பேராசிரியர் வாசிலி பொண்டார
(டி. எஸ்ஸி: வரலாறு)

# கட்சி வழிகாட்டுதலின் அரசியல் இயல்பு

சோவியத் சமுதாயம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் காண்கிறதோ அந்த அளவுக்கு அது கூடுதல் சிக்கல்வாய்ந்த பாரிய பிரச்னைகளைக் கையாள்கிறது, சோவியத் மக்களின் அரசியல் தலைவன் என்ற வகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரமும் அதிகம் உயர்ந்ததாகிறது.

## தொழிலாளி வர்க்கத்தின் நிலைப்பாடுகளிலிருந்து

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி எல்லா விஷயங்களையும் வர்க்க, சோஷலிஸ நிலைப்பாடுகளிலிருந்து கொண்டு நடத்துகிறது, அரசியல் தொலைநோக்கை தொழிலாளி வர்க்க மற்றும் கம்யூனிஸ நிர்மாணத்தின் நிலையிலிருந்து வகுக்கிறது என்பதையே சோ. க. க.வின் வழிகாட்டுதல் குறிக்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் நிலைப்பாடுகளை மக்களின் ஏனைய வெகுஜன ஸ்தாபனங்களும் பிரதிபலிக்கின்றன; அவை, கட்சியின் கொள்கைக்கு இசைவாகச் செயல்படுவதுடன் அக்கொள்கையை வரைவதிலும் பங்கு கொள்கின்றன. ஆனால் புரட்சிகரமான மார்க்ஸிய—லெனினியக் கட்சி மாத்திரமே தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களைத் திரட்சியான வடிவத்தில் தெரிவிக்கக் கூடியதாகவும், இந்த நலன்களை துரிதமாகவும் ஆழமாகவும் படம் பிடித்துக் காட்டும் கொள்கையைக் கடைப்பிடிக்கக் கூடியதாகவும் உள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியாகவும், அதன் மூலக் கருவாகவும் முன்னணிப் படையாகவும் கம்யூனிஸ்ட் கட்சி விளங்குவதால், அதனுடைய அரசியல் சாராம்சத்தை அது சிகரப்படுத்துகிறது.

கட்சி வழிகாட்டுதலினுடைய அரசியல், வர்க்க அடிப்படையிலான இயல்பு, சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் பாத்திரத்தை ஊக்குவிக்கிறது என்பதையும் பொருள்படுத்துகிறது. இதன் பொருள் யாதெனில் சமூக—பொருளாதார, அரசியல் மற்றும் சித்தாந்தவியல் பரிபக்குவத்தின் திசையில் தொழிலாளி வர்க்கத்தைத் திசைப்படுத்துவதும், பரந்த வெகுஜனங்களுடைய நடவடிக்கையைத் தூண்டுவதும் ஆகும். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வர்க்க, பாட்டாளி வர்க்கக் கொள்கை அனைத்து வர்க்கங்கள், சமூகக் குழுக்களின் நலன்களைக் கருத்திற் கொள்கிறது; தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுத்துறையினருக்கிடையேயான கூட்டணியையும், சோவியத் ஒன்றியத்தில் வாழுகின்ற எல்லாத் தேசங்கள், தேசிய இனங்களின் மத்தியில் நட்புறவையும் சகல வழிகளிலும் ஊக்குவிக்கிறது. இது வளர்ச்சியுற்ற சோஷலிஸம் முன்னேறிச் செல்கையில் லெனினியக் கட்சியினுல் அரசியல் ரீதியாக வழிகாட்டப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குகிறது.

விஞ்ஞான சோஷலிஸத்தினுல் வழிகாட்டப்படும் கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சியம்-லெனினியத்தில் உள்ளடங்கி இருப்பதற்கேற்ப தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தத்தைத் தெரிவிக்கிறது, அதனுடைய மிகவும் வளர்ச்சி பெற்ற, செயலூக்கமுள்ள பிரதிநிதிகளைத் தனது அணிகளில் ஐக்கியப்படுத்துகிறது என்பதில் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மற்றுமொரு தனித்துவமான அம்சம் தங்கியுள்ளது.

இவை எல்லாம் சமூக, மற்றும் அரசியல் நிகழ்வுப் போக்குகளின் மீது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி செலுத்தும் வழிகாட்டுதலின் திட்டவட்டமான இயல்பையும், சோவியத் சமுதாயத்தின் வளர்ச்சி மீது அது செல்வாக்குச் செலுத்துகின்ற வடிவங்கள், முறைகளையும் விளக்கிக் கூறுகிறது.

## கட்சியின் மதிப்பும் செல்வாக்கும்

வர்க்கங்களுக்கும் சமூகக் குழுக்களுக்கும் இடையே, தேசங்களுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள உறவுகளின் ஒரு துறையாக விளங்கும் அரசியல், அதிகாரத்தின் அல்லது அதிகாரப் பிரயோகத்தின் வெளிப்பாடுகளுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புபட்டுள்ளது. கட்சியைப் பொறுத்த வரையில் அதன் கடமைகள் அரசாங்கத்தின் அல்லது நிர்வாகத்தின் கடமைகளைப் போன்றவையல்ல; ஆனுல், அரசியல்—சித்தாந்தவியல் அல்லது அரசியல்—ஸ்தாபனரீதியான கடமைகளா-



கும். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய அதிகார வலிமையினுல் அல்லாமல், அதனுடைய அரசியல் கௌரவம் மற்றும் வெகுஜனங்கள் மத்தியில் கொண்டுள்ள சித்தாந்த ரீதியான செல்வாக்கின் காரணமாகவே தன்னுடைய முன்னணிப் பங்கினை நிறைவேற்றுகிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய பணியில் உழைக்கும் மக்களின் நலன்களுக்காகப் பல தசாப்தங்களாக நடத்திய போராட்டத்தின் மூலம் வென்ற அதன் சித்தாந்தவியல் மற்றும் தார்மீக மாண்பு மீதும், அதனது அரசியல் மற்றும் ஸ்தாபன ரீதியிலான அனுபவத்தின் மீதும், சம்பவங்களின் போக்கைச் சரியாக முன்னுணர்கின்ற, அவசியமான மார்க்கத்தில் அவற்றை ஆற்றுப்படுத்துகின்ற அதன் ஆற்றல் மீதும் சார்ந்திருக்கிறது.

சோஷலிஸ சமுதாயத்தில் மார்க்சிய—லெனினியக் கட்சிதான் அதிகாரத்தின் நிர்ணயமான காரணியாகும்.. இக்கட்சி இல்லாமல் தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியை நினைத்தும் பார்க்க முடியாது. கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வழிகாட்டுதலின் கீழ், அதன் பொதுவான பாதையைக் கடைப்பிடிப்பதன் மூலம் மாத்திரமே உழைக்கும் மக்கள் ஆட்சி அதிகாரத்தை வென்றெடுத்து, பாதுகாத்துக் கொள்வதோடு சமுதாயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்வதற்கும் சோஷலிஸத்தைக் கட்டுவதற்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தவும் முடியும்.

கட்சியானது அதனுடைய நடவடிக்கை முழுவதன் மூலம் ஜனநாயக ஸ்தாபனத்திற்கான உதாரணத்தை முன்வைக்கிறது. சோஷலிஸ சமுதாயத்தினுடைய வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் வியாபிக்கின்ற ஜனநாயகக் கோட்பாடுகளை உருவாக்கி விருத்தி செய்கிறது. இவ்விதம், மக்களின் ஆட்சியை வியாபிப்பதிலும், சமுதாயத்தினதும், அரசினதும் விவகாரங்கள் அனைத்தையும் நிர்வகிப்பதற்கு உழைக்கும் மக்களை ஈர்த்தெடுக்கும் வடிவங்களை முழு நிறைவாக்குவதிலும் அது ஒரு கருவியாக உள்ளது.

## கட்சிப் பணியின் முறைகள்

கட்சி வழிகாட்டுதலினுடைய திட்டவட்டமான அரசியல் இயல்பு கட்சிக் குழுக்கள், அரசாங்க மற்றும் பொருளாதார முகாமைத்துவ நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையிலான கடமைகளை துல்லிதமாக வேறுபடுத்திக் காட்டுவதிலும் வெளிப்படுத்தப்படுகிறது.

கட்சிப் பணியின் அரசியல் மார்க்கம், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியானது அரசு மற்றும் பொது வாழ்வு ஸ்தாபனங்களின் கடமைகளை எடுத்துக் கொள்வதில்லை என்பதையும், அவற்றுக்குரிய துணை அமைப்பாக செயல்படுவதில்லை என்பதையும் பொருள்படுத்துகிறது. கட்சி வழிகாட்டுதலின் அரசியல் சாராம்சம் அதனுடைய சாராம் சத்திலேயே சோவியத்துக்கள், தொழிற்சங்கங்கள், இளைஞர் ஸ்தாபனங்கள் மற்றும் பிற பொதுவாழ்வு ஸ்தாபனங்களின் நடவடிக்கை மீது கட்சிச் செல்வாக்கின் வடிவங்கள், முறைகளுக்கு எழுச்சியூட்டுகிறது;

பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சி தொடர்பான பிரச்னைகளை கையாள்கையில், அவற்றைத் தான் அரசியல் தலைவன் என்ற முறையில் அணுகுவது அல்லாமல் குறிப்பிட்ட வேலையின் மேற்பார்வையாளராகவும் அணுகுகின்றது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய அரசியல் வழிகாட்டுதலை வெற்றிகரமாக நிறைவேற்றுகிறது. ஏனெனில், அது மக்கள் மீது சார்ந்திருக்கிறது. அவர்களுடன் நெருக்கமான தொடர்பினை வைத்துக் கொள்கிறது. வெகுஜனங்களின் அனுபவத்துக்குக் கொடுக்கப்படும் ஆகக் கூடிய கவனம், அவர்களது ஆக்கபூர்வ உள்ளாற்றலில் விசுவாசம், அவர்களுடைய சிந்தனைகளையும் நலன்களையும் தெளிவான கோஷங்களாகவும் செயல் வேலைத்திட்டங்களாகவும் மாற்றுவதற்கான ஆற்றல் ஆகியன கட்சியின் வரலாறு முழுவதிலும் பிரதிபலிக்கின்றன. கட்சி வழிகாட்டுதலினுடைய வலிமை வெகுஜனங்களுடனான அதனுடைய பிணைப்புகளில் தங்கியுள்ளது. ஏனெனில், எந்தவொரு சமூக—பொருளாதாரப் பிரச்னையையும் உழைக்கும் மக்களின் செயலூக்கமான பங்கேற்பு இல்லாமல், அவர்களுடைய விரிவான ஆதரவு இல்லாமல் தீர்க்க முடியாது. கட்சியினதும் மக்களினதும் ஒற்றுமை சோஷலிஸ வளர்ச்சி ஆண்டுகளின்போது வலுப்படுத்தப்பட்டுள்ளன; இது புதிய சமுதாயத்தில் வலிமைமிக்க ஆக்கபூர்வ சக்தியாகும்.

''பிராவ்தா''
பத்திரிகையிலிருந்து

## வரலாறும் அனுபவமும்

ஜெனரல் அலெக்லி யெபிசேவ்
சோவியத் இராணுவம், கடற்படையின்
அரசியல் திணைக்களத் தலைவர்

# லெனினின் கட்சி-மாபெரும் தேசபக்த யுத்தத்தின் அமைப்பாளர்

1985ம் ஆண்டில் சோவியத் மக்கள் அனைவரும், உலகம் முழுவதிலுமுள்ள முற்போக்காளர்கள் யாவரும் ஒரு முக்கியமான தினத்தை—ஹிட்லர்வாத நாஜிஸத்தின் மீதும் ஜப்பானிய இராணுவவாதத்தின் மீதும் ஈட்டப்பட்ட மாபெரும் வெற்றியின் நாற்பதாம் ஆண்டு விழாவை—கொண்டாடுவர். 1945-ம் ஆண்டிற்குப் பின்னர் கழிந்துள்ள ஆண்டுகளின்போது, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைமையின் கீழ் சோவியத் மக்கள் ஈட்டிய சாதனையின் மகத்தான தன்மையை எம்மால் காண முடிந்துள்ளது;

தம்முடைய சோஷலிஸத் தாயகத்தைத் தன்னலமின்றி பாதுகாத்த சோவியத் மக்கள் உலக ஆதிக்கத்துக்கான பாஸிஸ ஆக்கிரமிப்பாளர்களின் பாதையைத் தடுத்து நிறுத்தினர்; ஐரோப்பிய, ஆசிய மக்களுக்கு, அவர்களை ஜெர்மன் மற்றும் ஜப்பானிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை செய்ததன் மூலம், நேரடியாக உதவினர். சோவியத் மக்களும் அவர்தம் ஆயுதப் படைகளும் மனிதகுலத்துக்கு ஆற்றிய மகத்தான சேவை இதுவாகும்.

சோவியத் யூனியன் பாஸிஸ-இராணுவவாத முகாமின் மீது வெற்றிவாகை சூடுவதற்குத் தீர்மானகரமான பங்களிப்பைச் செய்தது; முதலாளித்துவத்தின் மீது

சோஷலிஸத்தின் அடிப்படையான மேம்பாட்டை, ஏகாதிபத்தியம் மற்றும் பாஸிஸத்தினது மனித இன விரோதச் சித்தாந்தத்தின் மீது சோஷலிசச் சித்தாந்தத்தின் அடிப்படை மேம்பாட்டையும் திட்டவட்டமாக நிர்ணயித்துக் காட்டிற்று. மாபெரும் அக்டோபர் புரட்சியில் ஜனித்த சோவியத் சமூக, ராஜ்ய அமைப்பு அதன் ஜீவிதத் தன்மையையும் வெல்லற்கரிய வல்லமையையும் முழு உலகுக்கும் நம்பகமாக காட்டியுள்ளது.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகள் மீதான வெற்றி பெரும் சர்வதேச முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அது, உலக சக்திகளின் சமநிலையை சோஷலிஸத்துக்குச் சாதகமாய் மாற்றியது; உலகப் புரட்சிகரப்போக்கு, முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டம், ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேச விமோசன இயக்கத்தினது வேகமான வளர்ச்சி ஆகியவற்றை வலிமையுடன் விரைவுபடுத்துவதாக மாறியது; ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பினுடைய வீழ்ச்சிக்குக் கட்டியம் கூறியது. உலக சோஷலிஸ அமைப்பு நடைமுறைக்கு வந்தது.

## கட்சியினதும் மக்களினதும் ஐக்கியம்

லெனினியக் கட்சி ஏகாதிபத்தியத்தின் படைப் பிரிவுக்கு எதிரான போராட்டத்தின் அமைப்பாளராய், தூண்டுகோலாய் இருந்தது. கொடிய யுத்த ஆண்டுகளின் போது அது சோவியத் மக்களை நெருக்கமாகக் கொண்டு வந்தது; அவர்தம் ஆற்றல், விருப்பம், செயற்பாட்டை ஒரே இலட்சியத்தின்பால், வெற்றியின்பால் திசைப்படுத்தியது. நாஜிஸத்துக்கும் இராணுவவாதத்துக்கும் எதிரான நீதியான போராட்டத்தில் வெற்றியை உறுதிசெய்த பிரதான காரணிகள் கட்சியினுடைய தலைமை தாங்கும், வழிகாட்டும் பாத்திரமும், அதனது கொள்கையுமேயாகும்.

கட்சியினுடைய அரசியல் தலைமையின் தனித்துவமான அம்சங்கள் மகத்தான தேசபக்த போர் ஆண்டுகளில் மிகவும் தெள்ளத் தெளிவுடன் வெளிப்பாடு பெற்றன; கட்சியினுடைய ஆழமான விஞ்ஞானபூர்வ தன்மை, புரட்சிகர ஆற்றலும் நோக்கத் தெளிவும், அதனுடைய எதார்த்த நிலையும் செயல்திறனும், முன்வைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதிப்பாடு, மனோதிடம் ஆகியனவுமே இத்தனித்துவமான அம்சங்கள் ஆகும். கட்சியானது, நாடு எதிர்நோக்கிய, மிகவும் சவால்விடுகின்ற தேசியப் பொருளாதாரக் கடமைகளை விரிவான அளவில் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை நிர்ணயம் செய்தது; எதிரிக்குப் பதிலடி கொடுப்பதற்கென சகல சக்திகளையும் அணிதிரட்டுவதற்காக முக்கியமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது. பொருளாயத, தொழில்நுட்ப, நிதி மற்றும் உழைப்புச் செல்வாதாரங்கள் இராணுவ உற்பத்தியின் நலன்களுக்காக மறுபங்கீடு செய்யப்பட்டன. போரின் முதல் ஆறுமாத காலங்களில் 1523 தொழில் நிறுவனங்கள் போர்முனையிலிருந்து தொலைதூரத்துக்கப்பால் கொண்டுசெல்லப்பட்டன, ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் இடம் மாற்றப்பட்டனர். சோவியத்துக்கள், தொழிற்சங்கங்கள், இளம் கம்யூனிஸ்ட் கழகம் மற்றும் பிற வெகுஜன ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் யுத்த முயற்சிக்கு உதவிபுரியும் வகையில் புனரமைப்பு செய்யப்பட்டன.

கட்சிக்குள்ளும் மாற்றங்கள் நிகழ்ந்தன. கம்யூனிஸ்டுகள் பலர் சிவிலியன் நிறுவனங்களிலிருந்து இராணுவ அமைப்புகளுக்கு மாற்றப்பட்டனர். ஸ்தல கட்சி ஸ்தாபனங்களின் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அதாவது, 1,100,000 கம்யூனிஸ்ட்டுகள் போரின் முதல் ஆறு மாத காலங்களில் இராணுவத்திலும் கடற் படையிலும் சேர்ந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையை தனது உள்நாட்டுக் கொள்கைக்கு மிகவும் நெருக்கமான விதத்தில் வகுத்து நடைமுறைப் படுத்திற்று. அது உலக நிகழ்வின் போக்குகளைத் தெட்டத் தெளிவாக ஆராய்ந்தது, ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளையும், உலக அரங்கில் சமூக, அரசியல் சக்திகளின் அணிசேர்க்கையையும் பகுப்பாய்வு செய்தது. பாஸிஸ—இராணுவவாத முகாமை முறியடிக்கவும், உலகின் யுத்த பிற்கால அமைப்பை நீதியான ஜனநாயக அடித்தளங்கள் மீது ஸ்தாபிக்கவும் உகந்ததான நிலைமைகளை உருவாக்குவதற்காக பாஸிஸ—விரோத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நாடுகள், மக்களினங்கள், அரசியல் ஸ்தாபனங்கள் மற்றும் சமூகச் சக்திகளின் முயற்சிகளை ஒன்று குவிப்பதற்கு கட்சியும் அரசும் பாடுபட்டன.

மகத்தான தேசபக்த போர் ஆண்டுகளின் போது கட்சி லட்சோப லட்சம் சோவியத் மக்களின் மதிப்பைச் சம்பாதித்துக் கொண்டது. அவர்கள் கட்சியின் மீது அசைக்க முடியாத விசுவாசம் கொண்டிருந்தனர், கட்சியும் அவர்களின் விசுவாசத்தைக் கௌரவத்துடன் நியாயப்படுந்

திற்று: கட்சியினதும் மக்களினதும் உருக்குபோன்ற ஒற்றுமை மாபெரும் வெற்றிக்கான நிர்ணயமிக்க நிபந்தனையாக இருந்தது.

## போராட்டக் கட்சி

போரின் ஆரம்ப நாட்கள் முதல போராட்டக் கட்சியாக மாறியிருந்த கம்யூனிஸ்ட் கட்சி, முக்கியமாக போர் முயற்சியை ஒழுங்கமைப்பதிலும் இராணுவப் போராட்டத்துக்கு வழிகாட்டுவதிலும் ஈடுபட்டது.

இராணுவப் பிரிவுகளைச் செயலூக்கம் பெறச் செய்வதற்காகக் கட்சி வகுத்தளித்த அமைப்பு சோவியத் ஆயுதப் படைகள் கூடுதல் விரைவாக ஈடுபடுத்தப்படுவதை உறுதி செய்தது. நாட்டின் செயலூக்கமுள்ள அணிதிரட்டு முறையும், ஆள்வலு செல்வாதாரங்களைப் பயனுள்ள முறையில் தொழிலில் ஈடுபடுத்தியமையும் சோவியத் ஆயுதப் படைகளின் எண்ணிக்கை வலிமையை ஆண்டுக்காண்டு துரிதமாக அதிகரித்தன. 2 கோடிக்கும் அதிகமான மக்கள் போரின் போது இராணுவத்திற்கு அழைக்கப்பட்டனர். 1945 மே மாத அளவில் சோவியத் ஆயுதப் படைகளின் எண்ணிக்கை பலம் மும்மடங்காகியது.

கட்சி—அரசியல் பணியையும் அதிகாரிகள் மற்றும் படைவீரர்களின் அரசியல் கல்வியையும் மேம்படுத்துவது கம்யூனிஸ்ட் கட்சியினதும் அதன் முன்னணி உறுப்பினர்களினதும் கவன மையமாக எப்போதுமே இருந்துவந்துள்ளது. வெற்றியானது அதிகாரிகள், படைவீரர்களதும் போர் முனைக்குப் பின்னணியில் உள்ள உழைக்கும் மக்களுடையவும் தார்மீக வலிமை மற்றும் போராட்டத் திறன் மீதே சார்ந்திருக்கிறது என்ற லெனினின் ஆய்வுரையை போர் நம்பகமாக நிர்ணயித்துக் காட்டியது.

மாபெரும் தேசபக்த போரின் ஒவ்வொரு கட்டத்திலும் மக்களுக்கும் ஆயுதப்படைகளுக்கும் ஸ்தூலமான கடமைகளைக் கட்சி முன்வைத்தது. அவை, கட்சித் தாக்கீதுகளிலும் பிரதம தளபதியின் கட்டளைகளிலும் வகுத்துரைக்கப்பட்டுள்ளன. ''எதிரி தோற்கடிக்கப்படுவான்! வெற்றி எமதே!'' என்பதே கட்சியின் கோஷமாகும். இதுவே ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டினதும், இளம் கம்யூனிஸ்ட் கழகத்தினரதும், ஒவ்வொரு படைவீரரினதும், தொழிலாளியினதும் போராட்டக் கோஷமாக இருந்தது.



கம்யூனிஸ்ட் கட்சி பிரதான கடமைகளை நிறைவேற்றுவதில் மக்களின் கவனத்தைக் குவிக்கும் கலையிலே தேர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை யுத்த முடிவுகள் காட்டின. சோஷலிஸத் தாயகத்தைப் பாதுகாப்பது பற்றிய லெனினின் கருத்துக்களால் வழிகாட்டப்பட்ட கட்சி, யுத்த காலங்களின்போது உறுதிவாய்ந்த தலைமைக்கு வகை செய்தது; போர்முனைக்குப் பின்னால் இருந்த தொழிலாளர்களின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியது, தற்காலிகமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பிரதேசங்களில் எதிரிக்குப் பலத்த எதிர்ப்பை ஒழுங்கு செய்தது. கம்யூனிஸ்ட் கட்சி இவ்வாறுதான் உலக வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை கொண்டு வந்தது.

மாபெரும் தேசபக்த போர் முடிவடைந்து ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் கழிந்துவிட்டுள்ளன. இப்போரில் பாஸிஸம் இராணுவ, அரசியல், பொருளாதார, சித்தாந்தவியல் படுதோல்வியை அடைந்தது. அந்த யுத்த காலங்களின் அனுபவமும் பாடங்களும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், அதனுடைய திட்டங்களும் அபாயகரமான நடவடிக்கைகளும் எதிர்க்கப்பட வேண்டும் என்பதையும், போரின் சித்தாந்தவியலுக்கு எதிராகச் செயலூக்கமான போராட்டம் எப்போதுமே தொடுக்கப்பட வேண்டும் என்பதையும் காட்டுகின்றன.

''பொலிட்டிச்செஸ்கோயே சம்யூர்சோவானி''
சஞ்சிகையிலிருந்து

## இளைஞர் உலகம்

# சோஷலிஸ நாடுகளில் இளைஞர் கழகங்கள்

இன்று சோஷலிஸ நாடுகளிலுள்ள இளைஞர் கழகங்களில் சுமார் 6 கோடி உறுப்பினர்கள் உள்ளனர். அகில யூனியன் லெனினிய இளம் கம்யூனிஸ்ட் கழகம் (சோவியத் யூனியன்), திமித்ரோவ் இளம் கம்யூனிஸ்ட் கழகம் (பல்கேரியா), ஹோ சி மின் கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கம் (வியத்நாம்), சுதந்திர ஜெர்மன் இளைஞர் சங்கம் (ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு), கியூபா கம்யூனிஸ்ட் இளைஞர் கழகம் ஹங்கேரி கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கம், மங்கோலிய இளம் புரட்சிக் கழகம், ருமேனிய கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கம், செக்கோஸ்லோவேக்கிய சோஷலிஸ இளைஞர் சங்கம், போலந்து சோஷலிஸ இளைஞர் சங்கங்களின் சம்மேளனம் ஆகியன இவற்றில் உள்ளன.

## சித்தாந்தப் பணி

இளம் கம்யூனிஸ்ட் கழகங்கள் சோஷலிஸ நிர்மாண ஆண்டுகளின்போது சோஷலிஸ சமுதாயத்தினுடைய அரசியல் அமைப்பின் முக்கியமான கூறாக மாறின. அவை, வளர்ந்துவரும் தலைமுறையினரின் நலன்களைப் பிரதிநித்துவப்படுத்துகின்றன, அதே சமயத்தில் இந்த நலன்களை சோஷலிஸ சமுதாயத்தின் கடமைகளுக்கு இசைவாக விருத்தி செய்கின்றன.

இளைஞர் கழகங்களின் பணிகள் முக்கியமாக சித்தாந்த, அரசியல் பணியின் பாலும், இளம் தலைமுறையினர் மத்தியில் மார்க்ஸிய—லெனினிய உலகக் கண்ணோட்டத்தை ஊட்டி வளர்க்கும் திசையிலும் மார்க்கப்படுத்தப்படுகின்றன.

இளம் மக்களுக்கு அரசியல் கல்வியைப் புகட்டுவது பல்வேறு சித்தாந்த, அரசியல் கல்வி வடிவங்களின் மத்தியில் விசேட இடத்தை வகிக்கின்றது. உதாரணமாக, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் இவ்வாறுதான் உள்ளது.



ஏழாம் வகுப்பிற்கு மேற்பட்ட இளம் பயனீயர்களும் பாடசாலை மாணவர்களும் "நீலப் பதாகையின் கீழ்" என்ற அரசியல் கல்வி மன்றங்களில் கற்கின்றனர். அவர்கள் அதில் சேருவதற்கு முன்பதாக சுதந்திர ஜெர்மன் இளைஞர் சங்கத்தின் சாசனத்தைக் கற்கின்றனர். இச்சங்கத்தின் முதல்நிலை அமைப்புக்கள் இளம் நிபுணர்களுக்கான கருத்தரங்குகளை நடத்துகின்றன. இந்த இளம் நிபுணர்கள் ஜெர்மன் சோஷலிஸ ஒற்றுமைக் கட்சியின் வேலைத் திட்டத்தையும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினின் வாழ்க்கை வரலாறுகளையும் மார்க்ஸிய—லெனினியத் தத்துவத்தையும் அரசியல் பொருளாதாரத்தையும் கற்கின்றனர்.

இளைஞர் ஸ்தாபனங்களது சித்தாந்த, அரசியல் பணியின் பிரதான அம்சம் இளம் மக்களுக்கு தேசபக்தி மற்றும் சர்வ தேசிய உணர்வைப் போதிப்பதாகும். ஹங்கேரி கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கம் நாட்டில் புரட்சிகர இளைஞர் தினங்களை நடத்தும் முன்முயற்சியை முன் வைத்துள்ளது. இத் தினங்கள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச்—ஏப்ரில் மாதங்களில் கொண்டாடப்படுகின்றன. சோஷலிஸ நாடுகளிலுள்ள பல இளைஞர் கழகங்கள் தம்முடைய உறுப்பினர்களுக்குத் தேசபக்த உணர்வைப் போதிக்கின்றன.

சோஷலிஸ நாடுகளின் இளைஞர் கழகங்கள் "இளைஞரும் மாணவர்களும் ஏகாதிபத்தியத்தைக் குற்றஞ் சாட்டுகின்றார்கள்" "ஏகாதிபத்திய விரோத ஒருமைப்பாடு, சமாதானம் மற்றும் முன்னேற்றத்துக்காக" ஆகியன போன்ற உலகளாவிய இயக்கங்களின் முன்னணிப் படையில் உள்ளனர்.

## உழைப்புக் கல்வி

"தொழிலாளர்கள், விவசாயிகளுடன் சேர்ந்து பணிபுரிவது மூலமே ஒருவர் மெய்யான கம்யூனிஸ்ட்டாக முடியும்"—லெனினின் இந்தக் கூற்று சோஷலிஸ நாடுகளின் இளம் தலைமுறையினரது வாழ்வில் இப்போது ஓர் நடைமுறை விதியாக மாறியுள்ளது.

ராஜ்யக் கடமைகளை நிறைவேற்றுவதில் இளம் மக்களை ஈர்த்தெடுப்பதற்கான பிரதான சாதனம் பாரிய தேசிய—பொருளாதாரத் திட்டங்களை அவர்களின் பாதுகாப்பில் இடுவதாகும்; அப்போது இளம் மக்கள் அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்தி, அவற்றில் பேரார்வத்துடன் உழைக்கத் தொடங்குகின்றனர்.

பல்கேரிய திமித்ரோவ் இளம் கம்யூனிஸ்ட் கழகம் இத்துறையில் பெரும் சாதனை புரிந்துள்ளது. பல்கேரிய இளம் கம்யூனிஸ்ட் கழகத்தினர் பொறுப்பாக இருக்கும் நிர்மாணத் திட்டங்களில் பின் வருவனவும் அடங்கும். கிரெமிகோவ்த்ஸ்கியிலுள்ள இரும்பு மற்றும் உருக்கு ஆலை, தெவ்னுவிலுள்ள அணுமின் ஆலை, பர்காஸிலுள்ள பெட்ரோ இரசாயன ஆலை,

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் இளைஞர் கழகம் அங்கு மக்களாட்சி மலர்ந்தது முதற்கொண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சம்பந்தப்பட்டு வந்துள்ளது. சோஸாவிலுள்ள ''சமாதான அணைக்கட்டு'' (1949), பெர்லின்—சொனபெல்ட் விமான நிலையம் (1949-1962) ஆகியனவும் பிறவும் பாரிய இளைஞர் திட்டங்களில் அடங்கும். ஜெர்மன் சோஷலிஸ ஒற்றுமைக் கட்சியினுடைய மத்தியக் கமிட்டியின் தீர்மானத்தின் பேரில் 1974ம் ஆண்டிலே ''சோயுஸ்'' வாயுக் குழாய்ப் பாதையின் ஜெர்மன் பகுதி நிர்மாணத்தை சுதந்திர ஜெர்மன் இளைஞர் சங்கம் பொறுப்பெடுத்தது. மிகச் சமீபத்தில், அது எண்ணற்ற பல உற்பத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் வேலைத் திட்டங்களின் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

இம் முன்முயற்சி தேசியப் பொருளாதாரத்தில் இளம் மக்களுடைய பொறுப்பிலே தரரீதியான புதிய திசை வழியைச் சித்தரித்துக் காட்டுகிறது. இதில் புதியது என்னவென்றால், இப்பொறுப்பேற்பு தொழில்நுட்பவியல் புரட்சியின் போக்கில் தோன்றும் புதிய பகுதிகளுக்கு வியாபிக்கிறது என்பதும், இளம் மக்களின் அதியுயர்ந்த கல்வித் தரத்தின் மீது இளைஞர் சங்கம் கூடுதல் நம்பிக்கை வைக்கமுடியும் என்பதும் ஆகும். இதன் பொருள் அரச கடமைகளை நிறைவேற்றுவதற்கான இளம் மக்களின் பொறுப்புணர்வு தீவிரமாக அதிகரித்து வருகிறது என்பதே.

ஹங்கேரி, செக்கோஸ்லோவேக்கியா மற்றும் பிற நாடுகளது இளைஞர் கழகங்களின் பொறுப்புப் பணியிலும் அத்தகைய மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன.

## சமூக ஸ்தாபனங்களின் அமைப்பில்

சோஷலிஸ நாடுகளின் இளைஞர் கழகங்கள் தேசிய, தேசபக்த, தாயக இயக்கங்களது கட்டமைப்புக்குள் ஏனைய சமூக ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்கின்றன. இவ்விதம், தேசிய முன்னணி ஆணைக்குழுவில் பணிபுரியும் 340,000



ஜெர்மன் பிரஜைகளில் 40,000 பேர் இளம் மக்களாவர்; இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேசிய முன்னணிகளின் பிரதான உறுப்புக்கள் இளம் தலைமுறையினரின் கல்விப் பிரச்னைகளை முறையாக விவாதிக்கின்றன; இளைஞர் ஸ்தாபனங்களுடைய மத்தியக் கமிட்டிகளுடன் தம்முடைய செயற்பாடுகளைக் கூட்டிணைக்கின்றன.

இளைஞர் கழகங்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான உறவுகளின் பெரும் முக்கியத்துவம் யாதெனில், இளைஞர் கழகங்களின் உறுப்பினர்களில் பலர் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களாகவும் இருப்பதுதான். செக்கோஸ்லேவேக்கியப் புரட்சிகரத் தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களில் கால்வாசிக்கும் அதிகமானவர்கள் 30 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள்; அவர்களில் கணிசமானவர்கள் சோஷலிஸட் இளைஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். பல்கேரிய தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களில் சுமார் 19 சதவீதத்தினர் இருபது வயது பராயத்தினரான இளம் மக்களாவர்.

இளைஞர் கழகங்கள் தம்முடைய சர்வதேச நடவடிக்கைகளில் வெளிநாடுகளிலுள்ள நட்புறவுக் கழகங்களுடன் நெருக்கமாகப் பணிபுரிகின்றன. சோஷலிஸ நாடுகளது இளைஞர் கழகங்களின் நாட்காட்டியில் பல முக்கியமான தினங்கள் உள்ளன. அவற்றில், மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் பன்னிரண்டாவது உலக இளைஞர், மாணவர் விழாவுக்கும், ஐக்கிய நாடுகள் சபையினுடைய தீர்மானத்தின் பேரில் 1985ம் ஆண்டில் அனுஷ்டிக்கப்படவிருக்கும் சர்வதேச இளைஞர் ஆண்டுக்கும் ஆன ஆயத்தங்கள் ஆகும்.

# ஜெர்மன் மண்ணில் சோஷலிஸத்தின் வெற்றி

தத்துவம் மற்றும் புரட்சிகர இயக்கம் என்ற வகையில் சோஷலிஸம் ஜெர்மன் வரலாற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளது. சோஷலிஸம் மற்றும் கம்யூனிஸம் பற்றிய கற்பனாவாதக் கருத்துக்கள் விஞ்ஞான சோஷலிஸத் தத்துவத்தால் மாற்றியமைக்கப்பட்டு, தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இரண்டறக் கலந்துவிட்ட முதல் நாடு ஜெர்மனிதான். இதற்குரிய வரலாற்றுச் சிறப்புமிக்க கௌரவம் ஜெர்மானிய, உலகப் பாட்டாளிகளின் தலைவர்களான கார்ல் மார்க்ஸுக்கும் பிரெடரிக் எங்கெல்சுக்குமே உரியது. ஜெர்மனியை சமாதானம் மற்றும் சோஷலிஸத்தின் ராஜ்யமாக மாற்றும் கடமையை ஜெர்மனிய தொழிலாளி வர்க்கத்தின் முன் அவர்கள் முன்வைத்தனர்.

முதலாம் உலகப் போரின் (1914-1918) முடிவு ஜெர்மனியில் புரட்சிகர தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வலிமைமிக்க எழுச்சியினால் குறிக்கப்பட்டது. ஜெர்மனியில் நவம்பர் ஏகாதிபத்திய விரோதப் புரட்சியின்போது (1918) ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது; 1917ம் ஆண்டின் மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் தாக்கத்தினுடைய விளைவே இது. இவ்விதம் மார்க்ஸியம்-லெனினியம் ஜெர்மனியின மண்ணில் உறுதியாகக் காலூன்றியது. ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உறுதியாகக் கடைப்பிடித்தது, பாஸிஸத்தையும் யுத்தத்தையும் துணிவுடன் எதிர்த்துப் போராடியது. ஆனால் ஜெர்மனியிலும் பொதுவாக உலகம் முழுவதிலும் இருந்துவந்த சக்திகளின் அணிசேர்க்கையானது ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாம் உலகப் போரைத் தடுத்து நிறுத்துவதை அசாத்தியமாக்கியது. போரைத் தூண்டிய நாஜி ஜெர்மனி முதற் கட்டமாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றை ஆக்கிரமித்துக் கொண்டது. ஜெர்மன் தேசம் உள்ளிட்ட ஐரோப்பிய மக்களை பாஸிஸ நுகத்தடியிலிருந்து விடுதலை செய்யும் கடமை மனிதகுலம் முகங்கொடுத்த முக்கியமான கடமைகளில் ஒன்றாகியது. இப்போரின் விழுப் புண்களை சோவியத் மக்களே ஏற்றனர், அதில் அவர்கள் வாகையும் சூடினர்.



## பாஸிஸத்தின் வீழ்ச்சியும் ஜனநாயகத்தின் மலர்ச்சியும்

நாஜி ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதி பற்றிய ஒப்பந்தம் 1945 மே 8ம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. இத் தினம் ஜெர்மன் மக்களது வரலாற்றில் பாஸிஸத்திலிருந்து அவர்கள் விடுதலை பெற்ற தினமாக வரையப்பட்டுவிட்டது.

ஆனால், அரசியல், சமூகப் பொருளாதார வாழ்விலிருந்து நாஜிஸத்தையும் இராணுவவாதத்தையும் ஒழித்துக் கட்டுவதற்குக் கிழக்கு ஜெர்மனிக்கு மேலும் நான்கு ஆண்டுகள் பிடித்தன.

சோவியத் யூனியனால் விடுதலை செய்யப்பட்ட ஜெர்மன் பிரதேசத்தில் கம்யூனிஸ்ட், சமூக ஜனநாயக, லிபரல் ஜனநாயகக் கட்சிகளும் கிறிஸ்தவ ஜனநாயக யூனியனும் அமைக்கப்பட்டன. சுதந்திர ஜெர்மன் தொழிற்சங்கங்களின் சம்மேளனமும், முற்போக்கான கலாச்சாரத் தொழிலாளர்களின் ஸ்தாபனமான குல்தூர்பண்டும், பின்னர் ஜெர்மன் இளைஞர் கழகமும் ஏனைய சில கட்சிகளும் ஸ்தாபனங்களும் அமைக்கப்பட்டன.

1945 ஜூன் 11ந் திகதி ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி ஜெர்மன் மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்தது.

சகல முற்போக்குச் சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதற்குத் துணைபுரிந்த ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேண்டுகோளின் அடிப்படை ஷரத்துக்கள் பின்வருமாறு: ஹிட்லர் ஆட்சியினதும் நாஜிக் கட்சியினதும் எச்சசொச்சங்களை முழுமையாக ஒழித்துக்கட்டுவது; நாஜித் தலைவர்களுக்கும் யுத்தக் குற்றவாளிகளுக்கும் சொந்தமான எல்லாச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து அவற்றை மக்களின் கரங்களுக்கு மாற்றுவது; பெரும் நிலச் சொத்துடைமையை ஒழித்துக் கட்டுதல்; போரினால் பாழடிக்கப்பட்டவர்களும் அநாதரவாக விடப்பட்டவர்களுமான விவசாயிகளுக்கு இந்நிலங்களைக் கைமாற்றுதல். மூன்றாம் முறையும் நாடு அழிவுக்குள் அமிழ்த்தப்படுவதைத் தடுக்கும் வண்ணம் புதிய ஜெர்மனுக்கான உறுதிவாய்ந்த அடித்தளங்களை இடவேண்டும் என்று இவ்வேண்டுகோள் வலியுறுத்தியது.

ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பிளவுக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் மூலமே இந்தக் கடமைகளைச் சாதிக்க முடியும் என்பதை கம்யூனிஸ்டுகளும் சமூக

ஜனநாயகவாதிகளும் நன்குணர்ந்திருந்தனர். ஒற்றுமைக்கான விருப்பம் 1946 ஏப்ரில் மாதம் ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட மார்க்ஸிய-லெனினியக் கட்சியின் தோற்றத்துக்கு இட்டுச் சென்றது. ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியையும், ஜெர்மன் சோஷலிஸ ஜனநாயகக் கட்சியையும் ஐக்கியப்படுத்தி ஜெர்மன் சோஷலிஸ ஒற்றுமைக் கட்சி உருவாக்கப்பட்டது. இக்கட்சியின் உருவாக்கம் ஜெர்மன் மண்ணில் மார்க்ஸியம்-லெனினியத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியாகும்.

நிலச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது; முதலாளித்துவ ஏகபோகங்கள் ஒழித்துக்கட்டப்பட்டன இவ்விதம் நாஜிஸத்தின் சமூக, பொருளாதார அடித்தளங்களும் இராணுவவாதமும் கிழக்கு ஜெர்மனியில் ஒழித்துக்கட்டப்பட்டன. ஜெர்மன் தேசம் முழுவதிலும் இந்த ஜனநாயகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படுமாயின் அந்நாடு அமைதிபூர்வ மற்றும் ஜனநாயகப் பாதைகளில் பிரவேசித்து விருத்தியடைந்திருக்கும்.

ஆயினும் அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சுத் துருப்புக்கள் கைப்பற்றியிருந்த மேற்குப் பகுதிகளில் ஜனநாயகமயப் போக்கு தோற்கடிக்கப்பட்டது; முற்போக்குச் சக்திகளின் முயற்சிகள் சகல விதத்திலும் நசுக்கப்பட்டன; தொழிலாளி வர்க்கக் கட்சிகளை ஐக்கியப்படுத்துவதும் தடுக்கப்பட்டது. நாஜிகளும் யுத்தக் குற்றவாளிகளும் தற்காலிகமாகவே தடுத்து வைக்கப்பட்டனர்; அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னர் அவர்களின் சொத்துரிமைகள் அவர்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டன. ஏகபோக அமைப்புக்கள் யாவும் தொடர்ந்து செயல்பட்டன.

இந்த வளர்ச்சிப் போக்கானது யுத்தத்துக்குப் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் கடைப்பிடித்து வந்த நீண்டகால அரசியல் நோக்கங்களினாலேயே நிர்ப்பந்திக்கப்பட்டது. நேசக் கூட்டணியின் உடன்படிக்கைகளைக் காற்றில் பறக்கவிட்ட அமெரிக்கா, ஜெர்மனி அமைதி விரும்பும் ஜனநாயக ராஜ்யமாக மலர்வதைத் தடுத்து நிறுத்த முயன்றது; இக்கண்டத்தில் முற்போக்கு இயக்கத்துக்கு எதிரான, சோவியத் யூனியன் மற்றும் பிற சோஷலிஸ நாடுகளுக்கு எதிரான போராட்டத்தில் ஓர் இராணுவ வெளிக் களமாக அதை மாற்றவும் எண்ணியது. ஜெர்மன் மக்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்த அமெரிக்கா, பிரிட்டன், ஆகியவற்றைச் சேர்ந்த ஏகாதிபத்திய வட்டாரங்கள் பழிதீர்க்க விரும்பிய ஜெர்மன் பிற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து 1950ம் ஆண்டில் ஜெர்மனியை உடைத்தன; ஏகாதிபத்திய மேற்கு ஜெர்மன் ராஜ்யத்தை—ஜெர்மன் சமஷ்டிக் குடியரசை உருவாக்கின;



## ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தோற்றம்

ஜெர்மனியைப் பிளவுபடுத்தும் கொள்கைக்கும் ஜெர்மன் மண்ணில் இராணுவவாதத்திற்குப் புத்தெழுச்சியூட்டுவதற்குமான பதில் நடவடிக்கையாக 1949 அக்டோபர் 7ந் திகதி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தோற்றம் பெற்றது. ஜெர்மன் வரலாற்றில் முதல் தடவையாக உழைக்கும் மக்களின் நலன்களைத் தெரிவிக்கும் ராஜ்யம் உருவாக்கப்பட்டது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் அரசியல் யாப்பில் அடிப்படைக் கோட்பாடுகளாக ஆதாரப்படுத்தப்பட்டிருக்கும் பாஸிஸ விரோத ஜனநாயகச் சீர்திருத்தங்கள் தொழிலாளர்கள், விவசாயிகள் இளம் ஜெர்மன் ராஜ்யத்திற்கான நம்பகமுள்ள அடித்தளமாக மாறின.

உள்துறை, அயல்துறைக் கொள்கைக் கோட்பாடுகள் மற்றும் இலட்சியங்களின் ஒருமித்தத் தன்மை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை ஏனைய சோஷலிஸ நாடுகளுடன் ஐக்கியப்படுத்திற்று. அவற்றுக்கு இடையிலான உறவுகள் மார்க்ஸியம்—லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியக் கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டப்பட்டு வருகின்றன. 1950 செப்டெம்பரில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பரஸ்பரப் பொருளாதார உதவிக் கவுன்சிலின் முழு உரிமை பெற்ற உறுப்பினராகியது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் சோஷலிஸத்தின் நிர்மாணமானது எமது யுகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க பக்கங்களில் ஒன்றாகும்; சோஷலிஸ ஒற்றுமைக் கட்சியின் தலைமையிலான கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் போராட்டம் மற்றும் ஆக்க முயற்சிகளின் விளைவாகும். அதேசமயம், சோவியத் யூனியன், பிற சோஷலிசக் கூட்டமைப்பு நாடுகள், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் ஆகியவற்றின் கூட்டு முயற்சிகளது வெளிப்பாடும் ஆகும்.

# சோவியத்-ஆபிரிக்கா: நட்புறவின் பாலம்

சோவியத் ஒன்றியத்தில் ஆபிரிக்க மக்களுடன் ஒருமைப்பாட்டுக்கான சோவியத் கழகம் செயல்பட்டு வருகிறது. இதன் நடவடிக்கைகள் பற்றி இக் கழகத்தின் செயலாளர்—நாயகம் ஹெர்மன் கிரியோவ் தெளிவுபடுத்துகிறார்.

இக் கழகத்துக்கும் ஆபிரிக்க நாடுகளில் செயல்படும் சோவியத் நட்புறவுக் கழகங்களுக்கும் இடையிலான உறவுகள் தற்காலத்தில் கூடுதல் முறையானதாகவும் ஸ்திரமானதாகவும்மாறிவருகின்றன. கூட்டுநடவடிக்கைகளுக்கான திட்டங்களில் கைச் சாத்திடப்பட்டுள்ளது. பிரதிநிதிக் குழுக்களைப் பரிமாறிக் கொள்வது, செயலூக்கமுள்ள உறுப்பினர்களுக்கு சோவியத் யூனியனில் கல்வி கற்பதற்கான சோவியத் நட்புறவுக் கழகங்களின் புலமைப் பரிசில்களை வழங்குவது, கண்காட்சிகளை ஒழுங்கு செய்வது போன்ற ஒத்துழைப்பின் பல்வேறு போக்குகளையும் முறைகளையும் அவை பிரதிபலிக்கின்றன. ஆற்றப்பட்டிருக்கும் பணியின் வீச்சு பற்றி சித்தரித்துக் காட்டும் புள்ளி விபரங்கள் இதோ: இக் கழகம் ஆண்டுதோறும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட திரைப்படப் பிரதிகளையும், 50 ஆயிரத்துக்குக் கூடுதலான நூல்களையும் ருஷ்ய மொழிப் பாடநூல்களையும், சோவியத் வாராந்தரிகளையும் ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்புகிறது.

இக் கழகத்துக்கும் சோஷலிஸத் திசையமைவு கொண்ட ஆபிரிக்க நாடுகளிலுள்ள (அங்கோலா, மொசாம்பிக், எதியோப்பியா மற்றும் பிற) நட்புறவுச் கழகங்களுக்கும் இடையில் நெருக்கமான, விரிவான ஒத்துழைப்பு விருத்தியடைந்துள்ளது.



இந்த ஒத்துழைப்பில் சோவியத் நட்புறவு மாதங்கள், வாரங்கள், நாட்களை நடத்துவதற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆபிரிக்காவில் இவை 1976ம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகின்றன. இவற்றில், ஒன்றியக் குடியரசுகளைச் சம்பந்தப்படுத்தும் சோவியத் தினங்கள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. இவை அங்கோலா, எதியோப்பியா, மடகாஸ்கர் மற்றும் பிற ஆபிரிக்க நாடுகளில் இடம் பெறுகின்றன.

ஆபிரிக்க மக்கள் ருஷ்ய மொழியைக் கற்பதில் பேரார்வம் காட்டி வருகின்றனர். தற்போது ஆபிரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போன்றவற்றில் 50 ஆயிரத்துக்கும் கூடுதலானவர்கள் ருஷ்ய மொழியைக் கற்கின்றனர். ஆபிரிக்க நட்புறவுக் கழகங்கள், சோவியத் கலாச்சாரக் கேந்திரங்களின் வாயிலாக சோவியத் இலக்கியங்களைக் கொண்ட நூலகங்களை எமது கழகம் அமைத்து வருகிறது. எம்முடைய கழகத்தின் தலைமையின் கீழ் புஷ்கின் ருஷ்ய மொழிக் கழகம் 1977 ஆண்டு கொங்கோவில் அமைக்கப்பட்டது. ஆபிரிக்க நாடுகளில் ருஷ்ய மொழிப் போட்டிகள் நடைபெறுகின்றன; இவற்றில் வெற்றிபெறுபவர்கள் மாஸ்கோவில் நடைபெறும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.

ஆபிரிக்காவின் சிருஷ்டி அறிவுத்துறையினருடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், கலாசாரப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கும் நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். எம்முடைய கழகத்தின் அழைப்பின் பேரில் எதியோப்பியா, செனகல், கானா, மாலி, தன்ஸானியா ஆகியவற்றின் புகழ்பூத்த கலைஞர்கள் தம்முடைய படைப்புக்களை சோவியத் யூனியனில் காட்சிக்கு வைத்தனர். ஆபிரிக்காவைச் சேர்ந்த இளம் எதார்த்த ஓவியர்களின் படைப்புக்கள் சோவியத் ஓவியர்கள், கலைஞர்களின் படைப்புக்களுடன் ஆபிரிக்க நாடுகளில் உள்ள சோவியத் கலாசார இல்லங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆபிரிக்காவுக்கு விஜயம் செய்யும் சோவியத் கலைஞர்களின் கண்காட்சிகள் மாஸ்கோவிலுள்ள நட்புறவு மாளிகையில் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. ஆபிரிக்க மங்களினங்களின் இசை இந் நாட்டில் அதிகரித்த ஆர்வத்தைத் தூண்டி வருகின்றது.

சோவியத் யூனியனில் ஆபிரிக்க எழுத்தாளர்கள், கவிஞர்களின் படைப்புக்களை சோவியத்தில் பிரசுரம் செய்வதை இக்கழகம் ஊக்கப்படுத்துகிறது. இதனுல் 1918-1982வரை சோவியத் மக்களின் 19 மொழிகளில் இரண்டு கோடியே பத்து லட்சம் பிரதிகளைக் கொண்ட 441 பதிப்புகளில் ஆபிரிக்கப் படைப்பாளிகளின் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதம் சோவியத் யூனியனில் ஆபிரிக்க மொழிகள்பற்றிய ஆய்வையும்எமது கழகம் ஊக்கு விக்கிறது. ஆபிரிக்கர்கள் சோவியத் யூனியனைப் பற்றியும், அதன் சமாதான அபிலாஷை பற்றியும், ஆபிரிக்க நாடு களுடன் நட்புறவையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பது என்ற அதன் விருப்பம் பற்றியும் சிறப்பாகப் புரிந்து கொள்வதற்கு எமது கழகத்தின் நடவடிக்கைகள் துணை புரிகின்றன. அவை, இன்றைய ஆபிரிக்கா முகங்கொடுக் கும் சிக்கலான பிரச்னைகள் பற்றி சோவியத் மக்கள் சிறப்பாகப் புரிந்து கொள்வதற்கும் உதவுகின்றன.



அலெக்சாண்டர் திஸாஸகோவ்

# வாஷிங்டனின் கொள்கையும் வளர்முக நாடுகளும்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத் தியக் கமிட்டி பொதுக் செயலாளர் கொன் ஸ்தாந்தைதன் செர்னென்கோ வாக்காளர் களின் முன் உரையாற்றும் போது பின் வருமாறு சொன்னுர்: ''அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட வட்டாரங்களது கொள்கை சமீப ஆண்டுகளில் தீவிரமாக் கப்பட்டிருக்கிறது. இக்கொள்கைக்குப் பல உதாரணங்களை உலகம் கண்டுள்ளது.''

அமெரிக்க யுத்தக் கப்பலான நியூ ஜேர்ஸி லெபனு னிய நகரங்களையும் கிராமங்களையும் குண்டுவீசித் தாக்கு தல் நடத்தியபோது அது அமெரிக்கக் கடற்படையின் ஒரு பிரிவாக மாத்திரம் இருக்கவில்லை. அது வளர்முக நாடுகள்பால் அமெரிக்கா கடைப்பிடித்துவரும் கொள்கை யின் ஓர் அடையாளமாகவும் இருந்தது. இம் மேலாதிக்கக் கொள்கை எவ்வளவு தூரம் ஈவிரக்கமற்றதாகவும் தன்னல மற்றதாகவும் இருந்தபோதிலும் அது பயனற்றதே. இது சற்றேனும் அபாயத்தில் குறைந்ததில்லை. ஏனெ னில், இராணுவ வலிமையைப் பாவிப்பது வல்லமை மிக்க ஏகாதிபத்திய அரசின் பொது நடைமுறையாக மாறிவிட்டுள்ளது.

வளர்முக நாடுகளின் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் எதிராகவும், தேச விடுதலை இயக்கங்களுக்கு எதிராகவும் வாஷிங்டனின் போக்குக்கு உதாரணங்களைக் காண ஒருவர் மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

லெபனானில் தலையீடு, சிரியாவுக்கு அச்சுறுத்தல், பாலஸ்தீனவிமோசனஇயக்கத்துக்கும்பொதுவில் அரபுவிமோசன இயக்கத்துக்கும் எதிரான போராட்டத்தில் டெல் அவிவுடன் ஒத்துழைப்பது, பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் பதற்றங்களைத் தூண்டிவிடுவது, கிரெனடாவில் ஆக்கிரமிப்பு, எல் சல்வதோரில் தலையீடு, நிக்கரகுவாவுக்கு எதிராகப் பிரகடனப்படுத்தப்படாத போர், இந்திய மாநிலங்கள் சிலவற்றில் பிரிவினை இயக்கத்துக்கு உதவி ஆகியனவும் இவற்றில் அடங்கும்.

## கொள்கை என்ற வகையில் பயங்கரவாதம்

‘‘பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது’’ என்ற முகாந்திரத்தின் கீழ் செயல்படும் வாஷிங்டன், உண்மையிலேயே, பயங்கரவாதத்தைத் தன்னுடைய அரசாங்கக் கொள்கையின் மட்டத்துக்கு உயர்த்தியுள்ளது. இதற்கு இசைவான அதிகாரபூர்வ ‘‘ரீகன் கருத்தமைப்பு’’ இல்லாத போதிலும் இக்கொள்கை நடைமுறையில் நின்று நிலவுகிறது.

‘‘சர்வதேசப் பயங்கரவாதம்’’ என்ப்படுவது மூலம் தேச விமோசன இயக்கங்களிலிருந்து தனது நிர்ப்பந்தத்துக்கு வருகின்ற எதிர்ப்பையே அது பொருள்படுத்துகிறது என்பது குறித்து அமெரிக்க நிர்வாகம் எதையும் இரகசியமாக வைத்திருக்கவில்லை. அமெரிக்கா சுதந்திரத்துக்காகப் போராடுகின்ற மக்களுடனும், புதிதாக வளர்ந்துவரும் நாடுகளுடனுமான தனது உறவுகளை முன்னேற்ற மற்றும் சோஷலிஸச் சக்திகளுடனான உலகளாவிய மோதலின் முகாந்திரத்திலேயே கருத்திற் கொள்கிறது.

வளரும் உலகில், குறிப்பாக கேந்திரப் பிராந்தியங்களிலும் மூலப் பொருள் செல்வாதாரங்களும் விசையும் மலிந்து காணப்படும் பிராந்தியங்களிலும் புரட்சிகரமான நிகழ்வுப் போக்குகளைத் தடுத்து நிறுத்துவதற்கு வாஷிங்டன் தன்னாலானதை எல்லாம் செய்து வருகிறது. அதே சமயம் புதிதாக விடுதலை பெற்ற நாடுகளுக்கும் சோஷலிஸ நாடுகளுக்கும் இடையிலான பந்தங்கள் மேலும் வலுப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு அது முயல்கிறது.

## ‘‘அமெரிக்காவின் விரோதி’’

வாஷிங்டனில் எரிச்சலைத் தூண்டுகிற கொள்கையைக் கொண்ட வளர்முக நாடுகளின் பட்டியலைப் பார்த்தால், நவீன உலகில் செல்வாக்குமிக்க சக்தியாக



விளங்கும் அணிசேரா இயக்கத்தில் அவை உறுப்பினர்களாக இருப்பதைக் காணமுடியும். தேசிய சுதந்திரத்தை வலுப்படுத்தவும், புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பை ஸ்தாபிக்கவும், ஆயுதப் போட்டியையும் அணுப்போர் அச்சுறுத்தலையும் தடுத்து நிறுத்தவும் ஆன போராட்டத்துக்கு அணிசேரா இயக்கத்தின் பங்களிப்பைக் குறைவாக மதிப்பிடமுடியாது. எனவேதான் அணிசேரா இயக்கத்தின் உறுப்பினர்கள் வெள்ளை மாளிகையின் கண்களுக்கு ‘‘அமெரிக்காவின் எதிரிகளாகவே’’ தோன்றுகின்றனர். இந்த இயக்கத்தைச் சீர்குலைக்கவும், வாஷிங்டனின் கட்டுப்பாட்டுக்குள் அதைக் கொணடு வரவும் அமெரிக்கத் தேசிய பாதுகாப்புக் கவுன்சில் நீண்டகால வேலைத் திட்டத்தை வகுத்துரைத்திருக்கிறது என்பது இரகசியமானதல்ல. இவ்வேலைத் திட்டத்தில், உதாரணமாக, இந்தியா, கியூபா, நைஜீரியா, அல்ஜீரியா மற்றும் தன்ஸானியாவின் மதிப்பைக் குறைக்கும் நடவடிக்கைகளும் அடங்கும். அதுபோலவே, நிக்காரகுவா அல்லது லெபனானில் அமெரிக்காவின் ஆயுதபாணியான தாக்குதல் எப்போதாவது நடந்தால் அது, அடுத்தவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும் என்பதே பொருளாகும்.

அணிசேரா நாடுகள் இன்றுபோல் என்றுமே அமெரிக்காவின் அப்பட்டமான நிர்ப்பந்தத்துக்கு உள்ளானதில்லை. ஜனாதிபதி ரீகனே அணிசேரா இயக்கத்தைப் பல தடவைகள் தாக்கிப் பேசியிருக்கிறார்.

## அணுவாயுத அச்சுறுத்தல்

அணிசேரா இயக்கத்தை ஆயுதப் போட்டிக்குள் ஈர்த்தெடுப்பது என்ற வாஷிங்டனின் அபிலாஷையும் அவற்றின் நலன்களுக்கு நேரடியாக முரண்படுகிறது. பொருளாதார சமூக முன்னேற்றத்துக்கான போராட்டம் உலகளாவிய இராணுவப் பெருக்கம் மற்றும் அணுப்போர் அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டத்திலிருந்து பிரிக்கமுடியாதது என்ற முடிவுக்கு ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் உள்ள கூடுதல் பொறுப்பு வாய்ந்த, அதிகாரத்துவமிக்க தலைவர்கள் வருகின்றனர். கடந்த ஆண்டில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் ராஜ்ய, அரசாங்கத் தலைவர்களின் மகாநாட்டில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, எந்தச் சூழ்நிலையிலும் அணுவாயுதங்களைப் பாவிப்பதையும், பாவிப்பதாக அச்சுறுத்தல் விடுப்பதையும் தடைசெய்வதையும், அத்தகைய ஆயுதங்களின் மேலும் விருத்தி மற்றும் நிலைவைப்பைத் தடைசெய்வதையும் பற்றி சர்வதேச உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்படவேண்டும் என்று மீண்டும் யோசனை தெரிவித்தார். ஆயினும் அமெரிக்காவும் நேட்டோவும் இக்கருத்தை எதிர்க்கின்றன.

மேற்கு ஐரோப்பாவில் பெர்ஷிங்-2 மற்றும் குரூய்சே ஏவுகணைகள் ஈடுபடுத்தி வைக்கப்படுவது ஆரம்பமாகியுள்ளது குறித்து அணிசேரா நாடுகள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன; அணுப்போர் வெடிக்கும் ஆபத்தை இச்செயல்கள் பெருமளவுக்கு அதிகரிக்கின்றன என்பதையும் அவை நன்கறிந்துள்ளன. மேலும், இது வளர்முக நாடுகளின் பந்தோபஸ்தைச் சிக்கலாக்குகின்ற ஒரு நிலைமைக்கு இட்டுச் செல்லுகிறது; ஏனெனில், மேற்கு ஐரோப்பாவில் ஈடுபடுத்தி வைக்கப்பட்டிருக்கும் புதிய அமெரிக்க ஏவுகணைகள், தம்முடைய கொள்கைகளை எதிர்க்கும் வளர்முக நாடுகளை அணு ஆயுதங்களைக் கொண்டு அமெரிக்கத் தலைவர்கள் அச்சுறுத்துவதற்கு எந்த நேரத்திலும் பயன்படுத்தப்படலாம். மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவின் பரந்த பிரதேசங்கள், குறிப்பாக சிசிலியில் நிலைவைக்கப்பட்டிருக்கும் இந்த ஏவுகணைகளின் வீச்சு எல்லைக்குள் வருகின்றன.

வளர்முக உலகில் நிலவும் ''அரசியல் ஸ்திரமின்மையைக்'' காரணமாகக் காட்டி அணு ஆயுதங்களைப் பாவிப்பதில் முதலாவதாக இருக்கக் கூடாது என்ற சோவியத் யோசனைக்கு எதிராக வாதிடும் சில அமெரிக்க அதிகாரிகளின் அறிக்கைகளை வளர்முக நாடுகளால் உதாசீனம் செய்ய முடியாதுள்ளது.

## சமாதானம், பந்தோபஸ்துக்காக

அமெரிக்காவினதும் அதன் நேட்டோ நேச அணிகளதும் கொள்கையின் சாராம்சம் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவர்களுக்கும் மக்களுக்கும் நன்கு தெரிந்ததாகும். எதியோப்பியாவின் தலைவரும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் அக்கிராசனருமான மெங்கிஸ்து ஹெய்லே மரியம் இதை மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார். ஆபிரிக்கக் கண்டத்திலும் உலகின் ஏனைய பாகங்களிலும் பதற்றம் நிலவுவதற்கு ஏகாதிபத்திய வட்டாரங்களே பொறுப்பு என்று அவர் சொன்னார். ஆபிரிக்க மக்கள் தம்முடைய உள்விவகாரங்களில் எந்தவொரு தலையீட்டையும் எதிர்க்கின்றனர், சமாதானம் மற்றும் பந்தோபஸ்துக்கான தம்முடைய அபிலாஷையைப் பிரகடனம் செய்கின்றனர்.

தம்முடைய விடுதலை, பொருளாதார மற்றும் பந்தோபஸ்துக்காகப் போராடும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் அபிலாஷையும் இதுதான். ஆயுதப் போட்டிக்கு எதிராகவும் அணுப்போர் அச்சுறுத்தலுக்கு எதிராகவும் நடத்தப்படும் போராட்டத்திலிருந்து இப்போராட்டமும் பிரிக்க முடியாதுள்ளது.

''பிராவ்தா''
செய்தித்தாளிலிருந்து

அலெக்ஸி மெஸ்கெர்ஸ்கி
பொருளியலாளர்

# மாற்றங்களின் போக்கில் இந்தியா

பல்துறைப் பயிற்சி நிலையம்

---

**இந்தியா தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து 37 ஆண்டுகளே கழிந்துள்ளன. இது, ஆயிரம் ஆண்டுகால பழைய வரலாற்றைக் கொண்ட ஒரு நாட்டிற்கு மிகக் குறுகிய கால கட்டமாகும். ஆனால், இக்கால கட்டத்தில் பிரித்தானிய காலனி ஆட்சியின் 200 ஆண்டுகளில் பெறப்பட்ட பின்தங்கிய நிலைமையை வெல்வதில் இந்தியா பாரிய வெற்றியீட்டியுள்ளது.**

---

## மக்களின் நலவாழ்வு மேம்படுகிறது

**1950ம்** ஆண்டுகளின் துவக்கத்தில் இந்தியாவில் நபர்வீத வருமானம் ஆண்டொன்றுக்கு 250 ரூபாவாகும். அதன் 36 கோடி மக்களில் எண்பது சதவீதமானோர் விவசாயத்தில் தொழில் செய்தனர்; 17 சதவீதத்தினருக்கு மாத்திரமே எழுத, வாசிக்கத் தெரிந்திருந்தது. சராசரி வாழ்க்கைக் காலம் 32 ஆண்டுகளாகவே இருந்தது.

இன்று, இந்தியா தொழில்மயமான நாடுகள் மத்தியில் பத்தாவது இடத்தையும், விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியல் ஆளணிகளின் எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது இந்த ஆண்டுகளின்போது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி ஏறக்குறைய பத்து மடங்காகவும், மின்னியக்கம் 30 தடவைகளும், எண்ணெய் உற்பத்தி 7 தடவைகளும், நிலக்கரி உற்பத்தி 4 தடவைகளும் கனிஜ பசளை உற்பத்தி 100 தடவைகளும் அதிகரித்தன.

தொழில்மயமாக்கமும் திட்டமிடல், பொதுத்துறையின் ஸ்தாபிதம் மற்றும் வளர்ச்சி. ஏற்றுமதி-இறக்குமதியில் அரசாங்கக் கட்டுப்பாடு போன்ற அரசப் பொருளாதார நெறிப்படுத்தலின் பல்வேறு வடிவங்களும்தான் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடிப்படையாகும்.

இந்த நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் இந்தியாவின் தேசிய உற்பத்தி போதியளவு அதிகரிப்பைக் காட்டவில்லை; ஜனத்தொகையில் துரிதமான வளர்ச்சி காரணமாக, தேசிய உற்பத்தியானது நபர்வீத வருமானம் படிப்படியாகக் குறைவதற்கு இட்டுச் சென்றது 1951 முதல், பொருளாதாரம் திட்டமிட்ட அடிப்படையில் நடத்தப்படுவதால் அதன் தேசிய உற்பத்தி துரிதமாக அதிகரித்து வந்துள்ளது. கடந்த 80 ஆண்டுகளில் அதன் வளர்ச்சி வீதம் சராசரி 3.5 சத வீதமாகும்.

## பொதுத் துறையின் பாத்திரம்

பொதுத் துறையின் ஸ்தாபிதம் இந்தியாவுக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இன்று நாட்டின் தேசிய வருமானத்தில் அது 20 சத வீதமாகும். இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி குறிப்பிட்டதைப் போல், நாட்டின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகவும், தனியார்க் கம்பெனிகளின் கரங்களில் முக்கியமான பொருளாதார நிலைகள் குவிவதைத் தடுப்பதற்காகவும்தான் பொதுத்துறை உருவாக்கப் பட்டது;

1951ம் ஆண்டில், இந்தியாவில் 5 தொழிலகங்கள் மாத்திரமே மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தன. 1980ல் இதன் எண்ணிக்கை 186 ஆகும். இவ்விதம், 1979-80 நடப்பாண்டில் 47 சதவீதப் பசளையையும், 78 சதவீத உருக்கையும், 99 சதவீத எண்ணெய்ப் பொருட்களையும், 98சதவீத நிலக்கரியையும், 100 சதவீத செம்பு மற்றும் தகரத்தையும் பொதுத்துறை உற்பத்தி செய்தது. 1961 முதல் 1981 வரையில் பொதுத்துறைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு மடங்காகியது; ஒருகோடி 20 லட்சத்திலிருந்து 2 கோடி 30 லட்சம் பேராகியது:

## விவசாய வளர்ச்சி

இந்தியப் பொருளியலாளர்கள் பலரின் கருத்துப்படி, சுதந்திரத்துக்குப் பின்னர் இந்தியா அடைந்துள்ள மிகப் பெரிய பலாபலன் விவசாய வளர்ச்சியாகும். 1950 முதல் தானியப் பயிர் உற்பத்தி வருடாந்தம் 2.8 சதவீதம் அதிகரித்தது; அதே காலகட்டத்தில் ஜனத்தொகை வளர்ச்சி வீதம் 2.1 சதவீதமாகும்.

உணவு உற்பத்தி 1951ல் 510 லட்சம் தொன்னாக இருந்து, 1979ல் 1310 லட்சம் தொன்னாக உயர்ந்தது; இவ்வாண்டில் இது 1420 லட்சம் தொன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கூடுதல் மகசூலைத் தரக்கூடிய கோதுமை இனங்களை சாகுபடி செய்ததன் காரணமாக கடந்த 20 ஆண்டுகளில் கோதுமை அறுவடை இரட்டிப்பாகியுள்ளது.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள சில முதலாளித்துவ அரசியல்வாதிகளும் பொருளியலாளர்களும், உருக்காலைகள், அணைக்கட்டுகள், மின் நிலையங்கள் போன்ற பெருவீத தொழில் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை நோக்கமாகக் கொண்ட இந்திய அரசாங்கத்தின் கொள்கையை கண்டிக்கின்றனர், இவை எல்லாம் விவசாயத்திற்குச் செல்வதிலிருந்து பணத்தைத் திசை மாற்றுகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், தொழில்துறை வளர்ச்சிக்கும், அணைகள், மின் நிலையங்களின் நிர்மாணம் மற்றும் மேம்படுத்தப்பட்ட விவசாயத்துக்கும் இடையே நேரடியான பிணைப்பு உள்ளது. இவ்விதம் தொழில்மயமானது பசளை உற்பத்தியை இந்தியா அதிகரிப்பதற்குச் சாத்தியமாக்கியது.

நாட்டின் உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக உணவு தான்ய உற்பத்தியை அடுத்த ஆறு ஆண்டுகளில் 330 லட்சம் தொன்னாகவும், அதற்கு அடுத்து வரும் 16 ஆண்டுகளில் 780 லட்சம் தொன்னாகவும் அதிகரிப்பதற்கு திட்டமிடப்படுகிறது.

## சுகாதார சேவையும் கல்வியும்

பொது சுகாதாரப் பராமரிப்பு இந்தியாவில் முன்னேற்றம் கண்டுள்ளது. குழந்தைகள், வயது வந்தோர் மத்தியிலான மரண வீதம் குறைந்துள்ளது. 1982ல், நாட்டின் சராசரி மனிதனின் வாழ்க்கை காலம் 52 ஆண்டுகளாகும். 1951 முதல் மருத்துவர்களின் எண்ணிக்கை மும்மடங்காகியுள்ளது.

பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை 1950ல் 233 லட்சத்திருந்து 1979ல் 10 கோடியாக அதிகரித்தது; அதே சமயம் மாணவர்களின் எண்ணிக்கையும் அதேகாலகட்டத்தின்போது பத்து மடங்காக அதிகரித்தது.

எனினும் இந்தியா இன்னமும் சிக்கலான பல சமூகப் பொருளாதாரப் பிரச்னைகளுக்கு முகங் கொடுத்திருக்கிறது. மக்களின் 28 கோடி பேர் அல்லது 40 சதவீதத்தினர் அதிகாரபூர்வ வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர்; 1981ம் ஆண்டின் புள்ளி விபரக்கணிப்பின்படி 64 சதவீதத்தினர் கல்வியறிவற்றவர்கள்; 1982 பிற்பகுதியில் 2 கோடி பேர் வேலையில்லாமல் இருந்தனர்.

இந்திரா காந்தியின் அரசாங்கம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குச் சாதகமான வெளி நிலைமைகளை உருவாக்க சகலதையும் செய்து வருகிறது. இந்தியா சமாதானத்துக்காகவும், நாடுகள் அனைத்தின் மத்தியில் ஒத்துழைப்பை மேலும் வளர்ப்பதற்காகவும் உறுதியான ஆதரவு தெரிவிக்கிறது.

# அணிசேரா இயக்கமும் இன்றைய உலகமும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அணிசேரா இயக்கத்தில் பொதுவான அம்சங்களின் முக்கியத்துவம், புதுடில்லியில் நடைபெற்ற இயக்கத்தின் கடைசி மகாநாட்டில் தெளிவாக வெளிப்பட்டன. அதனுடைய பணி மற்றும் தாக்கீதுகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வினால் குறிக்கப்பட்டன என்றும் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் சிக்கலான சூழ்நிலையில் மீண்டும் ஊர்ஜிதப்பட்டிருக்கிறது என்றும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

டில்லி மகாநாட்டின் பொதுவான பெறுபேறுகள் அடுத்த சில ஆண்டுகளுக்கென இயக்கத்தின் இலட்சியங்களை நிர்ணயம் செய்தன. இம்மகாநாட்டில் வழமையான அரசியல், பொருளாதாரப் பிரகடனங்கள் மாத்திரமன்றி விசேட டில்லி விண்ணப்பம் ஒன்றும் விடுக்கப்பட்டது. இதில், அணிசேரா நாடுகள் ஆயுதப் போட்டியை நிறுத்த வேண்டும் என்று கோரின, எமது காலத்தில் மனித குலத்தின் நலவாழ்வை மாத்திரமன்றி வருங்காலத் தலைமுறைகளையும் அச்சுறுத்துகின்ற அணு மோதல் திசையில் சறுக்கிச் செல்வதை உடனடியாகத் தடுத்து நிறுத்த அவை விரும்புகின்றன என்று அவை கூறின. இம் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அணுப் போரைத் தடுத்து நிறுத்தவும், எந்தச் சூழ்நிலையிலும் அணுவாயுதங்களைப் பயன்படுத்துவது, அவற்றைக் கொண்டு அச்சுறுத்துவது ஆகியவற்றைத் தடைசெய்யவும், அணுவாயுதங்களின் மேலும் உற்பத்தியையும் நிலைவைப்பையும், அவற்றின் பரிசோதனைகளையும் நிறுத்தவும் சர்வதேச உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அணுவாயுத வல்லரசுகள் அதியவசரமான, செயலூக்கமுள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இவை எல்லாம் சோஷலிஸ நாடுகளின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இசைவானதாகவுள்ளன.

டில்லி மகாநாட்டுக்கு ''ஆயத்தங்கள்'' செய்யும் போது, அமெரிக்கா இந்தியாவின் உள்நாட்டு நிலையை கவனத்திற்கொண்டு நிலைமையை உக்கிரப்படுத்த உதவியது (உதாரணமாக, அஸ்ஸாம் மாநிலத்தில் பதற்றம்). மகாநாட்டு புறக்கூடத்தில் அமெரிக்கப் பிரதிநிதிகள் தீவிரமாகச் செயல்பட்டனர். ராஜாங்கத் திணைக்களத்



தைச் சேர்ந்த ஒரு பெரிய குழு டில்லி மகாநாட்டிற்கு வந்தது. இதில் வளர்முக நாடுகளில் பணியாற்றிய அனுபவமுள்ள 12 அதிகாரிகள் இருந்தனர். இறுதித் தாக்கீதின் ஏகாதிபத்திய விரோத, குறிப்பாக அமெரிக்க—விரோதத் தொனியை மென்மையாக்கும் முயற்சியில் அணிசேரா இயக்கத்தின் மீது நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டது. அமெரிக்கா தன்னைப் பணிவோடு பின்பற்றும் நாடுகளை ஒரு குழுவாகத் திரட்டுவதில் முனைப்பாக செயல்பட்டது.

இச்சிக்கலான நிலைமையில் மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதற்கான சிறப்பு முழுவதும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கே உரியது என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அணிசேரா இயக்கத்தை ஐக்கியப்படுத்தும் உண்மையிலேயே பாரியதான, உலகளாவிய பிரச்னைகள் முன்னணிக்குக் கொண்டு வரப்பட்டன. மகாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றிய இந்தியப் பிரதமர் படைக்குறைப்புக்காகவும் பதற்றங்களைத் தணிப்பதற்காகவும், வெகுஜனப் பேரழிவு ஆயுதங்களைத் தடைசெய்வதற்காகவும் போராடுவதன் ஜீவாதாரத் தேவையை வலியுறுத்தினார். இந்த முதனிலைக் கடமைகளோடு வளர்ச்சியுற்ற நாடுகளதும் வளர்முக நாடுகளதும் பொருளாதார மட்டங்களில் இருந்துவரும் இடைவெளியை இல்லாதொழிக்கும் நீண்டகாலப் பிரச்னையும் இணைக்கப்பட்டது. திருமதி காந்தி தன்னுடைய உரையில், ''வரம்புக்குட்பட்ட அணுப்போர்'' கருத்தமைப்பைக் கண்டித்தார்; ஏகாதிபத்திய விரோதமே ''எம்முடைய உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையாக'' இருந்து வருகிறது என்று வலியுறுத்திக் கூறினார்.

சோவியத் யூனியனைப் பொறுத்தவரையில் அணிசேரா இயக்கத்தின்பால் அதன் அடிப்படையான மனோபாவம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24, 25, 26வது காங்கிரசுகளின் தீர்மானங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோவியத் அரசின் தலைவர்கள் விடுத்த அறிக்கையிலும் தெளிவாக வகுத்தளிக்கப்பட்டுள்ளது; சமீபத்திய கட்சிக் காங்கிரசுகள் ஒவ்வொன்றினதும் தாக்கீதுகளில் இப்பிரச்னை பிரதிபலிப்பு பெற்றுள்ளது என்ற உண்மையானது சோவியத் யூனியன் இப்பிரச்னைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

சோவியத் யூனியன் இன்றைய சர்வதேச உறவுகளில் அணிசேரா இயக்கத்தை மிகப் பெரிய ஸ்தூலமான காரணியாகக் கருதுகிறது: ஏகாதிபத்திய-விரோத, காலனியாதிக்க விரோதப் போக்கிலும், சமாதானம் மற்றும் தேசங்களின் பந்தோபஸ்து இலட்சியங்களுக்கான அதன் உறுதிப்பாட்டிலும் அணிசேரா இயக்கத்தின் உள்ளாற்றலைக் காண்

கிறது. சமாதானத்துக்காகவும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, நவகாலனியாதிக்க, இனவாதக் கொள்கைகளுக்கு எதிராகவும், சர்வதேசப் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளில் நிர்ப்பந்தத்துக்கும் அநீதிக்கும் எதிராகவும், இந்த உறவுகளை ஜனநாயக மயமாக்குவதற்காகவும், தாம் தேர்ந்தெடுத்த பாதையில் சுயாதீனமாக வளர்ச்சியடைவதற்கென மக்களினங்களுக்கும் நாடுகளுக்கும் உள்ள உரிமையை நடைமுறையில் உணரப் பெறுவதற்காகவும் ஆன போராட்டத்தில் இந்தச் சக்திகளுடனேயே சோஷலிஸ நாடுகள் ஒத்துழைக்கின்றன.

அணிசேரா இயக்கம் சம்பந்தமான கொள்கையானது உலகிலே வளர்முக நாடுகளின் நிலைப்பாடுகளது மாற்றங்களிலான இயக்கவியலைக் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறமுடியாது- எழுபதாம் ஆண்டுகள் தேசிய விமோசன இயக்கங்களின் புதிய மனப்பதிவுமிக்க சாதனைகளால் குறிக்கப்பட்டது.

அணிசேரா இயக்கம் அதனுடைய வளர்ச்சியின் முக்கியமான கட்டத்தினூடாகச் செல்கிறது. இது, முதலாவதாக, இரு போக்குகளுக்கிடையிலான பதற்றமுள்ள மோதலினால் குறிக்கப்படுகின்ற தற்போதைய சர்வதேச நிலைமையினால் நிர்ணயிக்கப்படுகிறது. இதில் ஒருபோக்கு சமாதானம் மற்றும் பதற்றத் தணிவுக்கு இட்டுச் செல்கிறது. மற்றைய போக்கு சர்வதேச உறவுகளை உக்கிரமாக்கி இராணுவமயமாக்கவும், போர் ஆபத்து அதிகரிக்கவும், அணுப் போரின்பால் மனிதகுலத்தைத் தள்ளிவிடவும் இட்டுச் செல்கிறது. மனிதகுலத்தின் எதிர்காலம் இந்த மோதலின் வெளிப்பாட்டிலேயே பெருமளவுக்குச் சார்ந்திருக்கிறது.

இந்த நிலைமையானது ஏகாபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் மேலாதிக்கக்கொள்கைக்கு எதிராகஉள்ளதும் அனல் அணுப்போர் முன்னிலையில் சமாதான மற்றும் பதற்றத் தணிவையும், மனிதகுலத்தின் பொருளாயத,கலாசார முன்னேற்றத்தையும் ஆதரிக்கின்றதும் ஆன சக்திகளிடம் ஆகவுயர்ந்த கோரிக்கைகளை விடுக்கின்றன.

தற்போது நடைபெற்றுவரும் போராட்டத்தில் அணிசேரா நாடுகள் வகிக்குமிடம் என்ன என்பதை அணிசேரா நாடுகளின் டில்லி மாநாடு மீண்டும் காட்டியுள்ளது. அவை போரும் சமாதானமும் பற்றிய பிரச்சினைகளில் தம்முடைய நிலைப்பாட்டை ஐ. நா பொதுச் சபையின் 38வது கூட்டத் தொடரில் ஊர்ஜிதம் செய்தது. இன்றைய சர்வதேச வாழ்வில் அணிசேரா இயக்கம் முக்கியமான காரணியாக விளங்குகிறது, உலகில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு நாடுகளின்



பேச்சாளராக உளளது என்பதைக் கருத்திற்கு கொள்ளும் இந்த நிலைப்பாட்டின் தார்மீக, அரசியல் முக்கியத்துவம் மகத்தானது.

அதேசமயம் சமாதானம், பந்தோபஸ்துக்கான பங்களிப்பை அதிகரிப்பதற்கு அணிசேரா நாடுகள் இன்னும் கூடுதலாகப் பங்காற்ற முடியும் என்பது வெள்ளிடைமலை. அவற்றின் தீர்மானங்களைக் கூடுதல் செயலூக்கமானதாகவும் ஆக்குகின்ற திட்டவட்டமான நடைமுறை நடவடிக்கைகள் பற்றியும், மோதலுக்கு ஊக்கமளிக்கும் மேலாதிக்கக் குழுக்களுக்குத் தீர்மானகரமான எதிர்ப்பு பற்றியும் நாம் பேசுறோம்.

அணிசேரா இயக்கத்தின் செயல்பாட்டையும் பங்குப் பணியையும் கட்டுப்படுத்துகின்ற, அதனது அரசியல் முக்கியத்துவத்துக்குக் குழிபறிக்கின்ற நோக்கத்தோடு ஏகாதிபத்தியத்தின் முயற்சிகளைத் தீவிரமாக்கி வருவது தற்செயலானதல்ல. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் சித்தத்தை உதாசீனம் செய்து, அவறறின் நலன்களைப் புறக்கணிக்கும் ஏகாதிபத்தியவாதிகள் அணிசேரா இயக்கத்தையும் பொதுவில் வளர்முக நாடுகளையும் ''கிழக்குக்கு'' எதிரான யுத்த களமாக மாற்ற முயல்கின்றனர்.

சோவியத் யூனியன் அணிசேரா இயக்கத்தைப் பெரிதும் மதிக்கிறது. அதனுடைய சமாதானம் விரும்பும் கொள்கை சர்வதேசச் சூழலை மேம்படுத்துவதற்குப் பயனுள்ள பங்களிப்பாக விளங்குகிறது. இந்த இயக்கம் காலனியாதிக்க நுகத்தடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டுள்ள நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை வேலைத் திட்டத்தையும்,சுதந்திரத்திற்கானஅவற்றின்விழைவையும்பிரதிபலிக்கிறது, அவை தம்முடைய சுயாதீனமான வெளிநாட்டுக் கொள்கையை வரைந்து, நடைமுறைப்படுத்தவும், உலக விவகாரங்களில் தம்முடைய செல்வாக்கை அதிகரிக்கவும் அது ஒரு வாகனமாக உள்ளது.

உலக அரசியலில் விடுதலை பெற்ற நாடுகளின் வளர்ந்தோங்கும் பாத்திரம் ஓர் நியதியான, பின்தள்ளமுடியாத போக்கு என்ற கருத்திலிருந்து சோவியத் யூனியன் முன்செல்கிறது. எனவேதான் அடிப்படை சர்வதேசப் பிரச்னைகள் குறித்து, யாவற்றுக்கும் மேலாக போரும் சமாதானமும் பற்றிய பிரச்னை குறித்து விவாதம் செய்து முடிவுகளை எடுப்பதில் அணிசேரா நாடுகளின் முழுமையான பங்கேற்பை முக்கியமானதாக சோவியத் யூனியன் கருதுகிறது.

ஏகாதிபத்தியத்தின்
சுயரூபம்

பிராண்டிசெக் கோலார்

# வன்முறையும் பயங்கரவாதமும் அமெரிக்கக் கொள்கையின் கருவிகள்

எமது கோளில் பயங்கரவாதத்தையும் வன்செயலையும் அமெரிக்காவே பிரதானமாகத் தூண்டி வருகிறது என்பதை உண்மைகள் காட்டுகின்றன. ஒவ்வொரு அம்சத்திலும் ஏகாதிபத்தியம் பிற்போக்கானது என்றும், பின்தள்ள முடியாத புரட்சிகர நிகழ்வுப் போக்கைத் தடுப்பதற்கான அதன் வீண் முயற்சிகளில் காட்டு மிராண்டித்தனம், கொடூரம் மற்றும் குற்றச் செயலின் எந்த அளவுக்குச் செல்லவும் அது தயாராக இருக்கிறது என்றும் லெனின் வகுத்த முடிவுகள் இந்த உண்மைகளை ஊர்ஜிதம் செய்கின்றன.

## அதிகாரபூர்வ கண்ணோட்டங்கள்

ஆப்கானிஸ்தான், போலந்து, செக்கோஸ்லேவேக்கியா, அங்கோலா மற்றும் எல் சல்வதோரின் உள் விவகாரங்களில் சோவியத் யூனியன் தலையீடு மேற்கொண்ட



தாகக் கூறி மேலை நாட்டுத் தகவல் சாதனங்கள் எழுப்பியுள்ள வெறித்தனமான கூச்சலை அனைவரும் அறிவர். 1981ம் ஆண்டிலே அமெரிக்காவில் ரீகனும் பிரிட்டனில் மார்கரட் தாட்சரும் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்தக் கூச்சல் மிகப் பெரிய பிரமாணங்களை எட்டியது. ஆனால், ஏகாதிபத்தியத்தின், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வரலாறு பகிரங்கமான தலையீட்டின் வரலாறு, பிற நாடுகளின் உள் விவகாரங்களில் நானுவிதமான தலையீடுகளையும் மேற்கொள்வதன் வரலாறு என்பது நன்கறிந்த ஒன்றாகும். இது கொள்ளைத்தனமான போர்களினதும் நேரடியான ஆக்கிரமிப்பினதும் வரலாறு ஆகும். இந்த ஆக்கிரமிப்பும் போர்களும் பிற நாடுகளின் பிரதேசங்களைக் கைப்பற்றுவது, கொடிய சர்வாதிகாரங்களை ஆட்சிபீடத்தில் அமர்த்துவது ஆகியவற்றுடன் இணைந்து வருகின்றன.

ஏகாதிபத்தியத்தின் இராணுவவாதமும் ஆக்கிரமிப்புத் தன்மையும் பயங்கரவாதமும் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவதை நாம் காண்கிறோம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல கருத்தமைப்புகள் உருவாகி வருகின்றன. கார்ட்டர் நிர்வாகத்துக்குப் பின்னர் வந்த ரீகன் நிர்வாகம் தனது சொந்த ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட, நன்கு பரிசீலனை செய்யப்பட்ட இராணுவக் கருத்தமைப்பை வகுத்தது. இதில் ஆச்சர்யப்படுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில், மத்தியப் புலனாய்வு ஸ்தாபனத்தின் (சி.ஐ.ஏ) பொறுப்பாளராகப் பல காலம் பணிபுரிந்த ஜோர்ஜ் புஷ் துணை ஜனாதிபதி பதவியை ஏற்றார்; வியத்நாமில் கேவலமான யுத்தத்தில் தனக்கென பொறுப்புப் பங்கை கொண்ட அலெக்சாண்டர் ஹெய்க் ரீகனின் முதலாவது ராஜாங்க செயலாளரானார். ''சமாதானத்தை விட கூடுதல் முக்கியமான விஷயங்கள் உள்ளன'' என்ற வருந்தக் கூடிய சொற்கள் ஹெய்க்கினுடையவைதான்.

ரொனல்ட் ரீகன் தன்னுடைய 1979-80 தேர்தல் பிரச்சாரத்தின்போதே தன்னுடைய இராணுவ வேலைத் திட்டத்தின் அடிப்படையை வகுத்துவிட்டார். கோள் முழுவதிலும் அமெரிக்காவின் சவால் விடப்பட முடியாத இராணுவ மேலாண்மையை உத்தரவாதஞ் செய்யும் ஆயு

தங்களுக்கு நிதியிடுவதே இவ் வேலைத் திட்டமாகும். எனவே ரீகனுடைய வெளிநாட்டுக் கொள்கையின் இலக்கு —பிளவு படாத உலகளாவிய ஆதிக்கமே என்பது தெளிவு.

அத்தகைய மேலாதிக்கத் திட்டங்களின் மையமாக விளங்குவது ''சர்வதேசப் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம்'' ஆகும். ரீகன் நிர்வாகத்தின் கொள்கைப்படி இது உலகில் எந்தவொரு புரட்சிகர, தேச விமோசன இயக்கத்தையும் குறிப்பதாகும்.

## சட்ட உத்தரவாதம்

1951ம் ஆண்டு அக்டோபரில், அமெரிக்காவில் ஒரு சட்டம் உருவாக்கப்பட்டு, அப்போதிருந்த ஜனதிபதி அதில் கைச்சாத்திட்டார். இச்சட்டத்தின்படி, சோவியத் யூனியன், போலந்து, செக்கோஸ்லேவேக்கியா, ஹங்கேரி, ரோமேனியா, பல்கேரியா, அல்பேனியா ஆகியவற்றில் வாழ்கின்ற பிரஜைகளுக்கு, அல்லது அந்நாடுகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு, நானாவிதமான கவிழ்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென நேட்டோவின் இராணுவ முகாம்களில் விசேடப் பயிற்சி அளிப்பதற்காக 10 கோடி டாலர் ஒதுக்கப்பட்டது.

1975ல், அமெரிக்க செனட் சபையின் கமிஷன் தயாரித்த விசேட அறிக்கை ஒன்றின்படி கொங்கோவின் தேசிய வீரரான பாட்ரீஸ் லுமும்பாவையும், சிலியின் வெகுஜன ஒற்றுமை அரசாங்கத்தின் தலைவர் சல்வதோர் அலெண்டேயையும், சிலியின் இராணுவத் தளபதி ஜெனரல் ரெனே சினெய்டரையும் படுகொலை செய்வதில் சிஐஏயும் ஏனைய அமெரிக்க உளவு நிறுவனங்களும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தன என்று சுட்டிக் காட்டியது. சோஷலிஸக் கியூபாவின் தலைவரான பிடெல் காஸ்ட்ரோவின் உயிருக்கு உலைவைக்க சி. ஐ. ஏ. பல தடவைகள் முயற்சிகள் எடுத்தது.

வாஷிங்டனின் ஆதரவோடும் சி.ஐ.ஏயின் பங்கேற்போடும் சிலியிலும் ஈரானிலும் பெரும் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது! இப்போது நிக்காரகுவாவிலும் எல் சல்வதோரிலும் இது மேற்கொள்ளப்படுகிறது.



சிஐஏயின் உதவியோடு 1983ம் ஆண்டின் பிற்பகுதியில் சிறிய சுயாதீன அரசான கிரெனடவை அமெரிக்கா முற்றுகையிட்டது. குறிப்பாக அமெரிக்காதான் ஏனைய பிற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்துகொண்டு ஆப்கானிஸ்தானுக்கு எதிரான பிரகடனப்படுத்தப்படாத போரை நடத்துகிறது; அதனுடைய உளவுச் சேவைகளின் துணையோடு ஆப்கான் எதிர்ப் புரட்சிக் கும்பல்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. அவற்றுக்கு நவீன ஆயுதங்களை வழங்கிறது.

அமெரிக்காவின் கொலைபாதகக் குற்றச் செயல்களுக்கு உடந்தையாளராக விளங்கும் இஸ்ரேலைப் பார்ப்போம்.

அரபு மக்களின் தேச விமோசன இயக்கம் காலனியாதிக்கவாதிகள் மத்தியக்கிழக்கில் தம்முடைய வலுவான நிலைகளைக் கைவிடச் செய்வதற்கு நிர்ப்பந்தித்தது. இதன் காரணமாக, ஏகாதிபத்திய ஏகபோகங்களின், பெரும்பாலும் அமெரிக்க ஏகபோகங்களின் நலன்கள் இடருக்குள்ளாகின. அமெரிக்காவைத் திருப்தி செய்ய விரும்பிய இஸ்ரேலின் ஸியோனிஸ ஆளும் வட்டாரங்கள் பிராந்தியத்தில் காவல்பார்க்கும் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டன. அவை இன்னமும் அமெரிக்க மூலதனத்தைத் தன்னலமில்லாமல் பாதுகாக்கின்றன. பல்வேறு வகையான தலையீட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வலுநிலையாகவும் எதிர்ப் புரட்சியை ஏற்றுமதி செய்வதற்கான செலுத்து தளமாகவும் இஸ்ரேல் மாறியிருக்கிறது,

1982ல் ஆண்டில் இஸ்ரேலியத் துருப்புகள் ஐந்தாவது தடவையாக, இம்முறை லெபனானுக்கு எதிராக, மற்றுமொரு இயக்கத்தை மேற்கொண்டபோது டெல் அவிவின் பாத்திரம் மேலும் தெளிவாகியது. வாஷிங்டனின் தாராளமான நிதியுதவி இல்லாமல் அரபுமக்களுக்கு எதிரான கொள்ளைத் தனமான செயலில் இறங்குவதற்கு டெல் அவிவ் துணிந்திருக்காது. லெபனன் மண்ணில் இஸ்ரேலியத் துருப்புக்கள் இழைத்த அட்டூழியம் இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லர்வாத பாஸிஸ்ட்டுகள் இழைத்த கொடுமைகளுக்கு இணையானது.

மார்க்சிய — லெனினியவாதிகள் பயங்கரவாதத்தை புரட்சிகர இலட்சியங்களைச் சாதிப்பதற்கான ஒரு சாதனமாக என்றுமே ஏற்றுக் கொண்டதில்லை; அவர்கள் அதை நிராகரித்தும், கண்டித்தும் வந்துள்ளனர். தத்துவம், சித்தாந்தம் மற்றும் அரசியல் நடைமுறை என்ற வகையில் இன்றைய சர்வதேசப் பயங்கரவாதமானது முதலாளித்துவ

சமுதாயத்தினாலேயே ஏற்படுத்தப்படுகிறது என்பதை வாழ்க்கை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இன்று சர்வதேசப் பயங்கரவாதமானது சோஷலிஸ நாடுகளாலும் சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தினாலும் நிராகரிக்கப்படுகிறது; ஏனெனில் இந்தப் பயங்கரவாதத்தினால் உலக முதலாளித்துவவாதிகளே பயன் பெறுவர்.

ஆனால், மக்களினங்களின் விருப்பத்துக்கு எதிரான சர்வதேசப் பயங்கரவாதம், வன்முறை கொள்கை இப்போதைக்கு ஏறக்குறைய எழுபது ஆண்டுகளாக சோவியத் யூனியன் கடைப்பிடித்து வரும் சமாதானம் மற்றும் சமூக முன்னேற்றக் கொள்கையினால் எதிர்க்கப்படுகிறது என்பதை வாழ்க்கை எடுத்துக் காட்டியுள்ளது. உலகின் முதலாவது சோஷலிஸ ராஜ்யமான சோவியத் யூனியன் ஆக்கிரமிப்புப் போர்களுக்கு எதிராகவும், சமாதானம் பந்தோபஸ்துக்காகவும் மனிதகுலம் நடத்தும் போராட்டத்தில் நம்பகமான கொத்தளமாக விளங்குகிறது.



# அமெரிக்கா: வன்செயல் தத்துவம்

வன்செயல் தத்துவம் முதலாளித்துவ சமுதாயத்தில், யாவற்றுக்கும் மேலாக அதன் கோட்டையான அமெரிக்காவில் உறுதியாகவும் ஆழமாகவும் வேரூன்றியுள்ளது என்பதைக் காணமுடியும். இத் தத்துவம் பூர்ஷ்வா உலகக் கண்ணோட்டம், சமூக விஞ்ஞானங்கள், முதலாளித்துவத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் ஊறிப்போயுள்ளது. சமீப ஆண்டுகளில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு அம்சங்கள்—மறைக்கப்படாத இராணுவவாதக் கொள்கை, உலக ஆதிக்கத்துக்கான கோரிக்கைகள், முன்னேற்றத்துக்கு எதிர்ப்பு, மக்களினங்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் மீறல்—தீவிரமடைந்துள்ளன.

அமெரிக்காவில் பொது நூலகங்களுக்குச் சந்தா செலுத்துவதை(அமெரிக்காவில் இதற்குப் பணம் செலுத்த வேண்டும்) விட, சிரமமில்லாமலேயே கைத்துப்பாக்கிகளை வாங்கலாம். அத்தகைய தாராள வர்த்தகத்தின் விளைவு நன்கு தெரிந்ததே: சிவில் உரிமைப் போராளிகள், சாதாரண அமெரிக்கர்கள் முதல் ஜனாதிபதிகள் வரையில் நூற்றுக்கணக்கான மக்களின் உயிர்கள் குண்டுகளுக்கு இரையாயின. ஆயுதங்களை விற்பனை செய்வதிலும் எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. நானாவிதமான போதைப் பொருட்களும் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்றன.

தொழில்நுட்பவியல் புரட்சி ஏகாதிபத்திய சித்தாந்தவியலாளர்களின் நம்பிக்கைகளை நியாயப்படுத்தவில்லை; அதுபோன்றே முதலாளித்துவ உலகம் நெருக்கடி அற்றதாக மாறவும் இல்லை. இதற்கு மாறாக, எமது காலங்களின் சமூக, பொருளாதார எழுச்சிகள் இருபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் முப்பதாம் ஆண்டுகளின் துவக்கத்திலும் முதலாளித்துவம் வாழ்ந்து தீரவேண்டி இருந்த காலகட்டத்தை நினைவுபடுத்துகின்றன. ''நலவாழ்வு ராஜ்யம்'' மற்றும் ''தொழில்துறைக்குப் பிந்திய சமுதாயம்'' பற்றிய கதைகள் மறைந்தொழிந்துவிட்டன. ஏகாதிபத்தியத்தின் கோட்டையில் அமெரிக்காவில் வாழ்வையும் சிந்தனையையும் இராணுவமயமாக்குவது உலக ஆதிக்கத்துக்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அறைகூவலுடன் இணைந்து செல்கிறது.

சோவியத் யூனியன்பால் பகைமையைத் தூண்டிவிடுவது மனித மனத்தை இராணுவமயமாக்கும் வழிகளில் ஒன்றாகும். பாடசாலையிலும், கல்லூரியிலும், வீட்டிலும், தொலைக்காட்சியிலும், வானொலியிலும் பல்வேறு வடிவத்தில் கம்யூனிஸ விரோதப் பொய்ப் பித்தலாட்டங்களைத் தினசரி ஒருவர் பெறுகிறார். உதாரணமாக, பல்வேறு மட்டங்களிலுமுள்ள அமெரிக்கக் கல்வி நிறுவனங்கள் ''கம்யூனிஸத்துக்கு எதிராக அமெரிக்கனிஸம்'' என்ற புதிய பாடத்திட்டத்தை அறிமுகஞ் செய்துள்ளன; அதன் நோக்கங்களையும் வறட்டுத்தனமான வெளிப்படையில் வகுத்துரைத்துள்ளன. சுதந்திர உலகின் ஒவ்வொரு பிரஜைக்கும் கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடவும் அழித்தொழிக்கவும் உடலியல் ரீதியிலும் மனோவியல் ரீதியிலும் பயிற்சி அளிப்பதே இந்நோக்கமாகும்.

ஏகாதிபத்திய அரசியல்வாதியின் உள்ளத்தில் மனச்சாட்சிக்கு இடமில்லை. இராணுவத் தொழில் தொகுப்பு அதன் கொள்கையையும் ஒழுக்க நெறியையும்—கொலைகாரர்களின் திருடர்களின், சுதந்திரத்தைத் கொலை செய்வோரின், சமூக முன்னேற்றத்தினுடைய எதிரிகளின் ஒழுக்க நெறியையும் சமுதாயத்தின் மீது செலுத்துகிறது. அத்தகைய தொகுப்புகள் தம்முடைய நாடுகளது மக்களைச் சித்தாந்தரீதியில் அச்சுறுத்தி, அவர்களின் பயந்த சுபாவத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. உதாரணமாக அமெரிக்க வர்த்தகரான ஈலெப்விரே வெறித்தனத்தோடு பின்வருமாறு கூறினார்: ''நீண்டகால அச்சுறுத்தல் இருந்து வருவதில் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.'' இவர் கெடுபிடிப்போரின் சிற்பிகளில் ஒருவரான ஜே. டல்லஸ் ஐம்பதாம் ஆண்டுகளின்போது உதிர்த்த சொற்களை அப்படியே திருப்பிக் கூறுகிறார். அவருடைய கருத்து பின்வருமாறாகும். ''பலம் வாய்ந்த ஆயுதப் படைகளைப் பராமரிப்பதனால் தோன்றும் பளுவை ஒரு நாடு சுமக்கச் செய்யவேண்டுமானால் யுத்தகாலத்தின் மனோவியல் சூழலுக்கு ஒத்ததான ஒரு உணர்வுபூர்வ சூழலை உருவாக்குவதும், வெளி அபாயம் பற்றிய தோற்றத்தை ஏற்படுத்துவதும் அவசியமாகும். ரீகன் நிர்வாகம் மிகவும் போர் வெறிகொண்ட ஒருவரின் அடிச்சுவடுகளை உறுதியுடன் பின்பற்றுகிறது.

எண்பதாம் ஆண்டுகளில் இருந்த நிலைமையைப் பார்க்கும் போது, கடந்த காலத்தை ஞாபகப்படுத்தி, கோமிண்டெர்னின் ஏழாவது காங்கிரசில் ஜோர்ஜி திமித்ரோவ் கூறியவற்றை நினைவு கூர்வது சாலச் சிறந்ததாகும்: ''பூர்ஷ்வா சித்தாந்தத்தின் படுபிற்போக்கான வகையறுவான பாஸிஸ சித்தாந்தம்—தனது அசட்டுத்தனத்தில் பைத்தியக்காரத்தனத்தில் எல்லைக்கோட்டையே அடைந்துள்ள ஒரு சித்தாந்தம் வெகுஜன செல்வாக்கை வென்றெடுக்கும் ஆற்றலைக் கொண்டது என்பதை பல தோழர்கள் நம்பவில்லை அது பெரும் தவறு...எவ்விதத்திலும் நாம் பாஸிஸத்தின் சித்தாந்தத் தொற்று நோயினுடைய வலிமையைக் குறைவாக மதிப்பிடக் கூடாது...''



அமெரிக்காவின் முற்போக்கு எழுத்தாளர் பிலிப்போனேஸ்கியும் இதே போன்ற ஒரு கருத்தை வெளியிடுகிறார். அவர் ரீகனை மேற்கோள் காட்டுகிறார்: எம்முடைய நிலைப்பாட்டை சாதாரணமான, பரிச்சயமான ஐந்து சொற்களில் தெரிவிக்கவேண்டும். எமக்கு மிகவுயர்ந்த பொ[illegible]ளாதாரத் தத்துவங்கள் தேவையில்லை, எமக்கு எந்தவெ[illegible] அரசியல் மற்றும் சித்தாந்தப் போதனைகளும் தேவையில்லை. எமக்கு மிகச் சுருக்கமான ஐந்து சொற்களே தேவை: குடும்பம், வேலை, வீடு, சுதந்திரம், சமாதானம் என்பனவே அவை.

இந்தக் கோஷங்களின் பின்னால், அபாயகரமானச் சுருக்கப்பட்ட இப் பொதுச் செய்தியின் பின்னால், கடந்த காலத்தில் ஜெர்மன் பெண்களுக்காக நாஜிக்கள் தயாரித்த குழந்தைகள், சமையலறை, தேவாலயம் என்ற கொடிய மூலப் பிரமாணத்துக்கு இணையான அரசியல் அணுகுமுறை உள்ளது என்பது வாசகர்களுக்குத் தெரிகிறதா என்று போனேஸ்கி கேட்கிறார்.

ஆம், அத்தகைய பொதுவான கோஷங்கள் ஸ்தூலமான சமூக, வர்க்க உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கவே செய்கின்றன.

அமெரிக்காவில் பொதுவாழ்வை இராணுவ மயமாக்குவதும் பாஸிஸ மயமாக்குவதும் நவீன எதார்த்தமாகும். அமெரிக்கர்களுக்கு உலகைத் துப்பாக்கியினாலும் கொடிய வன்முறைப் பளிங்குக் கண்ணாடியினாலும் பார்ப்பதற்குப் போதிக்கப்படுகிறது. ஆயுதப்படை இல்லாமல் மனிதகுலம் குழப்பத்தில் மூழ்கிவிடும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள அமெரிக்கனுக்குப் போதிக்கப்படுகிறது. அணு ஏவுகணைப் போருக்கு ''இடமளிக்கும்'' வாய்ப்பை ஏற்றுக்கொள்வதற்கு அமெரிக்கன் போதிக்கப்படுகிறான். உண்மையில், அது ஐரோப்பாவில் ''வரம்புக்குட்பட்ட'' போர்தான். ''ஏன்'' என்று எவரும் கேட்கலாம். ரீகனின் குழுவிலுள்ள ''சிந்தனையாளர்கள்'' அதற்கு ''சோவியத் அரசியல் அமைப்பை அழித்தொழிப்பதற்கே'' என்று பதிலளிப்பர், கிழக்கில் ''புதிய அமைப்பு'' பற்றிய கனவுக்குப் புத்தெழுச்சியூட்டப்படுகிறது. இந்த வெறித்தனமான கருத்துக்கு அமெரிக்க அரசாங்கம் மாறுவது இதுதான் முதல் தடவையல்ல. ட்ரூமனின் பணிப்புரையின் பேரில் நாற்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில், சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக அணுவாயுதத் தாக்குதலை நடத்துவதற்கு வகுக்கப்பட்ட திட்டத்தை நினைவு கூர்வது இங்கு

பொருத்தமானதாகும். இது நிகழ்ந்திருக்குமானால், சோவியத் யூனியனை இரு மணித்தியாலங்களில் ''கதிர்வீச்சு அழிபாடுகளாக'' மாற்றியிருக்கும்.

ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளையும், மனோவியல் போர்முறையையும், சித்தாந்தக் குழிபறிப்பையும் எதிர்த்துப் போராடுவதற்காக கம்யூனிஸ்ட்டுகளின் சமாதானக் கொள்கையும், மார்க்ஸிய— புதிய லெனினிய சமூக நம்பிக்கைச் சித்தாந்தமும் உண்டு. நோக் உலகம் முழுவதிலும் அது வளர்ந்தோங்கும் ஆதரவை வென்றெடுத்து வருகிறது. அமெரிக்காவிலும் கூட, ரீகன் நிர்வாகத்தின் அழிவுகரமான கொள்கைகள் குறித்து கவலை அதிகரித்து வருகிறது.

சோஷலிஸம் சர்வதேசப் பிணக்குகளை படைபலப் பிரயோகம் மூலம் தீர்ப்பதை அடிப்படையிலேயே எதிர்க்கிறது, நாடுகளுக்கிடையிலான மோதல்களுக்குச் சமாதானபூர்வத் தீர்வைப் பரிந்துரைக்கிறது, உலகப் பிரச்னைகளுக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்ப்பதில் முன்னணியில் திகழ்கிறது. கருத்து மோதல்கள் நாடுகளுக்கிடையிலான, மக்களினங்களிடையிலான மோதலாக உருப்பெறுவதை சோவியத் யூனியன் எப்போதுமே உறுதியாக எதிர்த்து வந்துள்ளது.

தலைமை… ..பா…ல் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக
செய்யப்ப…டது.

சோஷலிஸம்
தத்துவமும் நடைமுறையும்

பல்துறைப் பயிற்சி நிலையம்

இம்மாத சஞ்சிகையைப்
பெற பின்வரும் முகவரிக்கு
எழுதுங்கள்:

சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

பிரகதி-அச்சகம் 93, மாளிகாகந்த ரோட், கொழும்பு-10